ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணு.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1--12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. ௧
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. ௨
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹூ ஆவணி-மீ 13-உ (28—8—1932) | மலர் 18.


## டாக்டர் சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் உண்மையான மருந்துகள்
ஆச்சரியமாய் அநேக நோய்களைக் குணம் செய்கிறது.

### மஹா சந்தனாதித் தைலம்.

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது.

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

கண் எரிச்சல்
கண் சிவப்பு
கண்ணில் நீர்வடிதல்
கண் பார்வைக்குறைவு
கண் கூச்சம்
கண்ணில் பீளை சாருதல்
மேகநீர், வெள்ளெழுத்து
ஒருத்தலை நோய்
கைகால் எரிச்சல்
மூலச்சூடு
அஸ்தி காங்கை
வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல்
காது நோய், காது மந்தம்
மண்டை இடி
பீனிசம்
தலை மயக்கம்
தலைப்பொடுகு
சொரி சிரங்கு
தலைமயிர் உதிர்தல்
நாள்பட்ட தலை நோய்

முதலிய பல வியாதிகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை.

24-அவுன்ஸ் டின் ரூ. 4-0-0.
12 ,, ,, ரூ. 2-2 0.

### சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும் திடசரீரத்தை உண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். சுருசுருப்பை உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை.

1-சேர் டப்பி ரூ. 2-8-0.

ஒரு முறை இத்தைலத்தையும், லேகியத்தையும் உபயோகித்தவர்கள் அதன் அருமையான குணத்தைக்கண்டு, அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீக்ஷித்துப் பார்க்கவும். பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாபள்ளி

# Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ratnanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் வரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

## இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

உங்கள்

## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

### பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

## ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 60 Pills Rs. 8 only. Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To

*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna)*
*E. B. R.*

## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

வேலூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை
கல்லுக்கட்டி.

சேலம்.
சிவசுப்ரமணியம், வீரராகவ
செட்டி தெரு, அரிசிபாளயம்.

கொழும்பு.
சிவன் கோவில் மேற்குமடம்
பருத்தித்துரை.

புதுவை.
திருவள்ளுவர் வாசிப்புசா
4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சோடாபாக்டரி
ராஜவீதி.

# சமதர்ம முரசு.

## இயற்கை நியதியாவதியாது?

### சுத்தமான ஆகாயம் எல்லோருக்கும் பொதுவாயிருக்க, இதில் அரசனுக்கும், ஆண்டிக்கும் தாரதம்மியம் ஏன்?

(தோழர் A. இரத்தினசபாபதி)

(3)

இயற்கை நியதிப்படி உலகிலுள்ள எத்தேச மக்களுக்கும் இன்றியமையாதவை காற்று, ஜலம், உணவு, ஓய்வு, இயற்கை, இன்பநுகர்ச்சி ஆகியவையே என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். இவற்றுடன் மக்களின் இன்றியமையாத பொருளாக "உடை"யும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்றைய உலகிலுள்ள எல்லோருமே 'இயற்கை, இயற்கை' எனப் பல ஆயிரம் தரம் கூறுகிறார்களானாலும் இந்த 'இயற்கை'யின் தத்துவமென்ன என உண்மையாகத்தெரிந்துகொண்டு அவ்விதம் பேசுவோர் மிகச்சிலர்தானிருக்கமுடியும்.

இயற்கையாவதுயாது?

இயற்கையின் தத்துவமென்னவெனில் அதன் இஷ்டப்படியே அது இயங்குவதாகும். உதாரணமாக தண்ணீர் காற்றைவிடக்கனமானது; ஆகையினால் அத்தண்ணீர் காற்றைக் கீழுழுந்தச் செய்துகொண்டு தானாகமேலே கிளம்பமுடியாது; ஆனால் அதேதண்ணீரைக்கொதிக்கவைத்தோமானால் அத்தண்ணீர் நீராவியாகமாறி மேலே செல்லுகிறது. 'நீராவி' என்ற பொருளாக இந்தத் தண்ணீர்மாறியவுடன், அது சாதாரணக்காற்றைவிட இலேசான தன்மையுடையதாக ஆகிறது. எனவே அது சுலபமாகக்காற்றை ஊடுருவிக்கொண்டு ஆகாயத்தில் செல்லுகிறது. 'இது இயற்கை'

தண்ணீர், தண்ணீராகவே இருத்தலின் அதன் கனத்தால் மேலே தானாகச்செல்ல இயலாதிருப்பதும் அது சாதாரண ஆகாயத்தைவிட இலேசான பொருளான 'நீராவி'யாக மாற்றப்பட்டவுடன் மேலேகிளம்புகிறதும், இயற்கைநியதியேயன்றி 'ஆகாயத்தைவிடக்கனமான இயல்புள்ள தண்ணீரை ரசாயன முறையால் மனிதன் வென்று அடக்கியாண்டுமேலேஆவியாகப்போகச்செய்தா'னெனக்கூறுவது பொருத்தமற்றதாகும், ஏனெனில் தண்ணீர் திரவபதார்த்தமாக இருக்கும் வரையிலும் மிகவும் இலேசானகாற்றை ஊடுருவிக்கொண்டு மேலேசெல்ல முடிகிறதில்லை. ஆனால் அதே தண்ணீர் 'வாயுபதார்த்தமாக மாற்றப்பட்டவுடன் அது சாதாரண 'ஆகாயத்தைவிடமிகவும் இலேசானதான ஆவியாக மாறிவிடுவதால் அது தானாகவே மேலே செல்லுகிறது. ரசாயனசாஸ்திரத்தால் மனிதன் இயற்கையை வென்றுவிட்டான் என்று கூறுவதைவிட 'இன்ன பொருளும் இன்ன பொருளும்; சேர்ந்தால் இன்னபொருளாகும், இன்ன பொருளும் இன்ன பொருளும் பிரிக்கப்பட்டால் அது இன்ன பொருளாக மாறும்' என்னும் இயற்கையின் உண்மைத்தத்துவத்தை ரசாயன சாஸ்திரி அறிந்துகொண்டிருக்கிறான் என்று கூறுவதுதான் பொருந்தும் அதுவே உண்மையானதுமாகும்.

அஃதேபோன்று 'இன்ன பொருள் இன்ன பொருளுடன் சேர்ந்தால் நான் மூன்றாவதான இன்ன பொருள் தோன்றும்' என்று இயற்கைநியதி இருக்கும்போது சேர்க்கத்தக்க பொருள்களைச் சேராது அப்படியப்படி இருந்தபடியே இருக்கையில் அந்த மூன்றாவது பொருளை மனிதன் செய்துவிட (உண்டாக்கிவிட) க் கூடுமாயின் அப்பொழுது அந்த இடத்தில் இயற்கை என்பது கட்டாயமான மிகவும் வலிமையுடையதாகமாட்டாதென்று நாம் கூறலாம். ஆனால் அப்படி ஏற்படக்கூடுமா என்றால் அதுதானில்லை!

உதாரணமாகத்தண்ணீர் குளிர்ந்திருக்கிறது. மிகவும் உஷ்ணகுணமுடைய ஏதாவதொரு சக்தியை அத்தண்ணீரில் புகுத்தினால்தான் தண்ணீரின் குளிர்ச்சி நீங்கி அவ்வுஷ்ணம் அத்தண்ணீரிலும் வியாபிக்கிறது. உஷ்ணம் ஊட்டும் அச்சக்தி விலக்கப்பட்டவுடன் சூடேறிய தண்ணீர் மறுபடியும் படிப்படியாகக் குளிர்ந்து தனது பழய தன்மையை அடைந்து விடுகிறது. இது இயற்கை. மனிதன் இயற்கையை வெல்லவேண்டுமாயின் 'உஷ்ண மூட்டத்தக்க ஒன்றை தண்ணீருக்குச்சம்பந்தப்படுத்தாமல் அதாவது எவ்விதத்திலாவது தண்ணீரைச் சூடுடையதாக ஆக்கத்தக்க ஓர் பொருளைத் தண்ணீருடன் சம்பந்தப்படுத்தாமல் அப்படியே தண்ணீர் சூடுடைய வெந்நீராக ஆக்கிவிடக்கூடுமாயின் மனிதன் இயற்கையை வென்றதாகக் கூறுவதுபொருந்தும். இப்பொழுது ஓர் ரசாயனசாஸ்திரி தண்ணீரை, நெருப்பின் உதவியாலோ, மின்சாரத்தின் உதவியாலோ, அல்லது தண்ணீருக்குள்சூடுகொடுக்கத் தக்க ஏதேனுமொன்றைத் தண்ணீருடன் கலந்தோ, சூரியனின் உஷ்ணத்தாலோ அல்லாமல்வெந்நீராகச்செய்யமுடியுமா என்பதுதான் கேள்வி. 'முடியாது' என்ற பதிலைத்தான் ரசாயன சாஸ்திரிகள்நமக்குத்தருவார்கள். எனவே இயற்கைஎன்பதானது 'அது ஓரிடத்தில் இருக்கவேண்டியது இன்றியமையாதது' என இருக்கும் நிலையிலிருந்தால் அந்தஇடத்தில் அதுஇல்லாமல் அக்காரியம் நடவாது. இது தான் இய்ற்கையின் தத்துவமாகும்.

உலகியலில்

மக்களுக்கு இன்றியமையாததாகவிருக்கும் பொருள்கள் எதுவாயிருப்பினும் அவை ஒவ்வொருவரும் அவசியம் பெறத்தக்கதாயிருக்கவேண்டும். மனிதன் 'அஃதில்லாமல் உயிர்வாழ முடியாது' என்று அவசியம் தேவைப்படும் ஒன்றை மனிதன் அடைய முடியாது போமாயின், நியாயமான முறையில் அடைய முடியாதபடி யாராவது செய்திருப்பார்களாயின் —எதுவாவது செய்திருக்குமாயின் அந்த மனிதன் தனது உரிமைப் பொருளான அதை—எவ்வாறேனும் அடையமுடிகிறான். அது அவனது கடமையுமாகும். தனது வாழ்நாளுக்கு இன்றியமையாததோ இயற்கையாகவே அதற்கப்பட்டிருந்தும் எதுவும் மனிதனுக்கு உரிமையுடையதாகிறது. அவ்வித வஸ்து எதுவேனும் ஒன்று உலகிலிருக்குமாயின் அது உலகமக்கள் எல்லோருடையவும் பொதுவுடைமையாகவே இருப்பதுதான் நியாயம். ஆனால் ஒரு மனிதன் அவ்வுரிமையைத்தனது எதேச்சாதிகாரத்தால் அளவு கடந்து தனது தேவைக்கதிகமாகச்சேமித்து வைப்பதால் நியாயமாக கிடைக்கவேண்டிய அளவுக்குக்கூடக் குறைந்த அளவேனும் அகப்படாமலிருக்கும் மனிதனோ, மனிதர்களோ அதைத்தங்கள் பொதுவுடைமைப் பொருளை எவ்வாறேனும் பெறமுயல்கின்றனர். முதலாவதாகக்

காற்று

என்பதை எடுத்துக்கொண்டோமாயின் உலகிலுள்ளமனிதர்கள் மட்டிலுமேயன்றி எந்த உயிருக்கும் 'காற்று' இன்றியமையாததாகவிருக்கிறது என்பது மறைபொருளற்ற தெளிவான விஷயம். ஒவ்வொரு மனிதனும் சுத்தமான காற்றையே உட்கொள்ளவேண்டியதும் அவசியமாகும், அவ்வாறின்றி எவ்வாறேனும் அசுத்தப்படுத்தப்பட்டகாற்றை மனிதன் உட்கொண்டால் அவன் தேகம் ஆரோக்கியத்துடனிராமல் சுகவீனம் ஏற்படும். காற்றில்லாமல் எந்தமனிதனும் உயிர்வாழ முடியாதாதலின் ஒவ்வொரு மனிதனும் சுத்தமான காற்றையே உட்கொள்ள வேண்டுமென்பது 'இயற்கை நியதியாதும்' எனவே உலகின் எந்தப்பாகத்தில் வசிக்கும் மனிதனும் சுத்தமான காற்றை அடைய உரிமையுடையவனாயிருக்கவேண்டும். அவ்விதம் வசதி செய்து தருவது அம்மனிதன் வாழும் அரசாங்கத்தின் கடமையே. அது முடியாட்சியாயினுஞ் சரியே, அன்றி குடியாட்சியாயினுஞ்சரியே.

ஆனால் இன்று உலகிலுள்ள எல்லாமனிதர்களும், அவ்விதம் சுத்தமான காற்றைப் பெறுகிறார்களா? சுத்தமான காற்றை அவர்கள் பெற வசதி இருக்கிறதா? அவர்களை ஆளும் அரசாங்கம் அதனைக்கவனித்து ஒவ்வொரு மனிதனும் ஸ்திரீயும் சுத்தமான காற்றைப்பெறும்படி வசதி செய்திருக்கிறதா? என்பதுதான் நமது கேள்வி.

இன்றைய நிலைமையில்.

உலகில் முடியரசுகள் பலவிருக்கின்றன. 'குடிஅரசும்' பலவிருக்கின்றன. இந்த அரசாங்கங்களின் ஆதரவில் கோடிக்கணக்கான மக்கள் உயிர் வாழ்கின்றனர். அந்த கோடிக்கணக்கான மக்களுள், மதம், ஜாதி அந்தஸ்து, கல்வி முதலியவற்றில் பலபேதங்கள் இருக்கின்றனவெனினும் அவர்கள் எல்லோரும் மனிதர்களோ என்பதில் என்ன தடை? நமது நாட்டில் 5 அடி சதுக்கமுள்ள ஓலைக்குடிசைகளில் [illegible]ளும், தானும், மனைவியும், அடுத்தாற்போன்று பன்றி, நாய், முதலிய மிருகங்களும் படுத்து நித்திரை செய்யும் சக்கிலியரும் தோட்டிமுதல் ஆசிரியர்களாகவும், டாக்டர்களாகவும், வக்கீல்களாகவும், வியாபாரிகளாகவும், ஜட்ஜுகளாகவும், கலெக்டர்களாகவும், கவர்னர்களாகவும், ஜமீன்தார்களாகவும், வைஸ்ராயாகவும், மந்திரிகளாகவும், மன்னர்களாகவுமுள்ள இந்த மனிதர்களும் அந்தஸ்துபேதங்கள் பலவாறிருந்தபோதிலும், அவற்றின் காரணங்கள் பலவாறிருந்தபோதிலும், இந்தத் தோட்டிமுதல் மன்னர்வரையுள்ள அனைவரும் மனிதர்களோ, மனிதரல்லரோ? என்பதை மறுப்பவர்யார்?

நான் முன்னால் வினவிய இந்த சுத்தமான காற்றின் தேவையாருக்கு எனக்கவனித்து கிடைத்த 'எல்லா மனிதர்களுக்கும்' என்ற விடைதான் எங்கும் கேட்கிறதேயொழிய 'மன்னர் பிரானுக்கு மட்டுமேதான் அல்லது இராஜப்பிரதிநிதி, கவர்னர், ஜட்ஜுகள், கலெக்டர்கள் இன்னும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்கள், செல்வவந்தர்கள் ஆகியோருக்கு மட்டிலுந்தான் சுத்தமான காற்றுத் தேவை; மற்ற கூலிவேலை செய்யும் ஏழை மக்களுக்கு சுத்தக்காற்று தேவையில்லை'' என்ற பதில் எங்கும் பெறக்காணோம். இதன்படி தோட்டிமுதல் மன்னர்வரையுள்ள மக்களின் மற்றபேதங்கள் ஒருபுறமிருக்க இவர்கள் (மனிதர்கள்) எல்லோருக்கும் சுத்தமான காற்று தேவை என்பது நன்கு புலனாவது அறிக.

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

# கடவுளும் மதமும் என் தேவையில்லை?

(என். ரங்கசாமி பி. ஏ., எல். டி.,)

மனம், வாக்கு, காயம் இன்னும் மற்ற அறிவுகளுக்கும் எட்டாத பொருள்,—ஆதியும் அந்தமும் இல்லாத பொருள்,—அருபியான பொருள்,—வேதம் முதலிய மற்றெல்லா "ஞான" நூல்களாலும் கண்டறியாதது, எனப்பட்ட பொருள்,—எக்காலத்தும் எவராலும் காணமுடியாத பொருள்,—உளதா இலதா என்று ஆராய்வது பித்தனது செய்கை. குழந்தைக்கு அறிவு முதிர முதிர, பூச்சாண்டிப் பயம் எங்ஙனம் காட்டமுடியாதோ அங்ஙனமே மனிதனுக்கு அறிவு முதிர முதிர, பகுத்தறிவு மேலோங்க, ஆராய்ந்தறியும் தன்மைவளர அஞ்ஞானம் அகன்று மெய்ஞானம் புக, மதமும் கடவுளும் விலகா நிற்கும்.

ஈண்டு கடவுளின் வரலாற்றை ஆராய்வோம்:—

பண்டைக் காலத்துப் பாமரமக்கள் ஓர் கட்டுப்பாடின்றி வாழ்ந்து வந்த காலத்து, அறிவால் முதிர்ந்த பெரியோர் ஓர் பாகுபாடு ஏற்படுத்தினர். தீங்கு செய்யின் நரகத்தில் கடவுளால் தள்ளப்படுவோம்; பாம்புகளாலும் தேள்களாலும் கடியுண்போம்; நெருப்பினால் சுடப்படுவோம்; செக்கிலிட்டு ஆட்டப்படுவோம்; இருப்புச் சலாகையால் குத்துண்போம்; அப்பா! இவ்வளவு துன்பங்களையும் எவ்வாறு சகிப்பதென வுன்னி பாமர மக்கள் தீமை புரியாதிருப்பரன்றோ? இப்பேர்க்கொத்த நரகத்திற்கு சூத்திரதாரி யார்? அவரே நாம் செய்யும் எல்லாச் செய்கைகளையும் பார்த்துப் பாரா கொடுத்துக் கொண்டிருக்கும் கடவுளாவர். அப்பேர்க்கொத்த கடவுள் யாவர், அவரைக் காண்பது முடியுமா, என்று கேட்டக்கால், அறிவாளிகள் யாது விளம்புவர்? கடவுள் என்றாலே யாவற்றையும் கடந்ததோர் பொருள், ஒருவராலும் அறியப்படாத, பார்க்க முடியாத பொருள் என்றே விடை கூறுவர்; பாமர மக்களுக்கு விளங்காதவாறு அருபி என்றும், சொருபி என்றும் கடவுளின் இரகசியத்தை மறைத்துவைத்தனர்; உண்மைத் தத்துவத்தை விளக்கினால் தான் குட்டு வெளிப்பட்டு விடுமே. இதுவே சிதம்பர இரகசியம்; இதைத் தவிர்த்து வேறொன்றும் கிடையாது.

மனிதன் இருவிதமான கட்டுப்பாடுகளால் கட்டுண்டு கிடக்கிறான். அவை, யாவையெனில், முதலாவது, அரசு முறை, மற்றொன்று மதக்கட்டுப்பாடு. உலகம் அரசாங்கக் கட்டுப்பாட்டால் மட்டும் நடைபெறுவது கஷ்டம். எல்லா மக்களுக்கும் கடவுள், நரகம் என்றபயமிருப்பின் ஒருவாறு தீமை விளைவியாது இருப்பர். ஆதலின் மதக் கட்டுப்பாடும், அதற்கு அரசனாகிய கடவுளும், நாமே நமக்கு சௌகரியத்திற்காக உண்டாக்கிக் கொண்ட ஓர் பொருளே அன்றி உண்மைப் பொருளில்லை. ஆனால் காலங்கள் பல செல்லச் செல்ல, இப்பொய்யான தத்துவம் மெய்யானதாக மாறி கடவுள் யாவர், அவர் என்ன, என்ற கேள்விகளைக் கேட்டு, உண்மையை மறந்து, அஞ்ஞானமாகிய இருட்டில் வழி தப்பி ஓலமிட மக்கள் ஆரம்பித்தனர்.

ஓர் கடவுள் தேசந்தோறும் பல வேறு கடவுள்களாக சீதோஷ்ண நிலைக்கும் பழக்க வழக்கங்களுக்கும் தக்கவாறு பிரிந்தார். பிரியவே இந்து மதத்தில் சிவன் பெரியவரா, விஷ்ணு பெரியவரா, என்ற கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற் போல ஆயிற்று. ஆகவே கடவுளும் மதமும் நன்மை செய்வதை விட்டுத்தீமையே பல விளைவிக்கலாயிற்று; ஓர் சாரினருக்கு வயிற்றுப் பிழைப்பிற்கும் ஆயிற்று.

இப்பொழுது உலகின் கண்ணுள்ள மதம் யாவும் எத்தகைய நிலையில் இருக்கிறது என்பீராகில்காரணமற்ற, காரியமற்ற, அறிவற்ற சடங்குகளாகவே உள்ளன. பண்டைக்காலத்து தீர்த்தங்கள் யாவும் தமது புனிதத்தன்மையை இழந்துள்ளன; ஆரோக்கியத்தைத் தரத்தக்க கங்காஜலம் தனது குணத்தை நவீன நாகரீகம் முதலிய காலவேறுபாட்டால் இழந்துள்ளது; ஸ்தல யாத்திரை நடையாலன்றி இரயிலால் போவதால் பிரயோஜனமில்லை; கானகங்களில் இரமணீகரமான தூயகாற்று திரேகத்தின் மீது வந்து படவில்லை; அழகிய வனங்களும் சோலைகளும் அழிக்கப் பட்டு இயந்திரசாலைகள் முதலியன கட்டப்பட்டு விட்டன; தற்போதுள்ள கோயில்கள் ஓர் பிரிவினர் வயிறு வளர்க்க ஏற்பட்ட உத்தியோக சாலைகளாகவும், தாசிகள் வீடுகளாகவும் மாறி விட்டன. திருவிழாக் காலங்களில் ஆடவனும் மடந்தையும் கண்ணடிப்பது எவ்வளவு? ஆண்களாகிய காலிகளின் திரேகம் பெண்கள் மீது உறைபடுவது எவ்வளவு? சூதாட்டங்களும் மற்றைய இழிவான விளையாட்டுகளும் எவ்வளவு? காலரா, பிளேக் முதலிய தொத்துநோய்கள் எவ்வளவு? ஏழைகளாகிய நம் மக்களின் பணம் வீணே செலவழிப்பதுஎவ்வளவு? கடன் வாங்கித் திருவிழாக்காலத்து முடி வாங்குவோர் எவ்வளவு? கடைசியாக இன் சால்வென்ட் ஆவோரும் எவ்வளவு? கடவுளின் தன்மையை நிலைநிறுத்த அயோக்கியர்கள் செய்யும் வஞ்சகம் எவ்வளவு? சேவற் காவடி என்ன? மச்சக்காவடி என்ன? பழனியில் திரைபிடாது யாவர்கள் முன்னும் இவ்வற்புதங்கள் நடைபெறட்டுமே பார்ப்போம்! இதன் தன்மை யாவது:— குருக்கள் குறிப்பிட்ட ஒருவனுக்கு ஓர் குறிப்பிட்ட கோழியையோ மீனையோ நன்றாகக் குழம்பு வைத்துக்கொண்டு வரச்சொல்லுவார். இவரும் அதே போன்ற மீனையோ கோழியையோ வைத்துக்கொண்டு ஓர் திரைக்குள்ளிருந்தோ ஓர் கூட்டத்திற்குள்ளிருந்தோ அதைக்கொண்டு வந்து விட்டுவிடுவார். என்னே கடவுளின் தன்மை! நவீன நாகரீக காலத்து அலகு குத்தி மோட்டாரை இழுத்துச்செல்லும் மாயம் என்னே? வாயில் அலகு குத்தியிருக்கும் தந்திரம் என்னே? இவையெல்லாம் வயிற்றுப்பிழைப்புக்காக, திராவகங்கள் உதவியாலும், தந்திரங்களினாலும் செய்யும் வேலையே யொழிய கடவுளின் தன்மை கிஞ்சித்தளவும் கிடையாது.

மதமும், கடவுளும் காலம் செல்லச்செல்ல அயோக்கியத்தனமாகவே முடிந்துள்ளது பண்டைய. காலத்து வருணாச்சிரம தருமம் எங்கே? எந்தப்பார்ப்பனன் ஓதலும் ஓதுவித்தலும் செய்கிறான்? எந்த க்ஷத்திரியன் காத்தலும், படைத்தொழிலும் புரிகின்றான்? எந்த செட்டி வியாபாரம் செய்கிறான்? எந்த அடிமை அடிமைத்தனம் செய்கிறான்? இவர்கள் யாவரும் வெள்ளையரிடத்து மிகக்கேவலமான அரை வயிற்றிற்கும் போதாத நாட்கூலிக்கும் மாதக்கூலிக்கும் பல்லை இளித்தேதான் நிற்கின்றனர். நமது தொழிலை நாம் செய்யாத, பிறரால் கேவலமாகக் கருதப்பட்டு வரும் நமக்கு உயர்சாதித்தன்மை எதற்கு? பார்ப்பாரப் பெயரும், க்ஷத்திரியப்பெயரும், செட்டியென்ற பெயரும் எதற்கு? இக்காலத்து மதம் தேவையில்லை; பகுத்தறிவு உதித்த இக்காலத்துக்கடவுள் தேவையில்லை.

மதத்தால் கட்டுண்டு வாழும் நாம் எவ்வளவு துன்ப முறுகிறோம்? ஓர் குழந்தை ஜனித்த காலம் முதற்கொண்டு—ஏன்—தாயின் கருவில் உதிக்கும் காலம் முதற்கொண்டு, கலியாணமாகி இறக்கும் வரைக்கும், இறந்த பின்னும் ஏற்படும் செலவுகள் எவ்வளவு? கடன் வாங்காது கலியாணம் செய்தவர்கள் எத்தனை பேர்? அதனால் அழிந்த குடும்பங்கள் எத்தனை? இவையாவும் மதத்தால் விளையும் தீமையன்றோ? மற்றும் மதமாகிய, சாதியாகிய பாசக்கயிற்றால் கட்டுண்டு ஒன்று சேராத உண்மைக்காதலனும் காதலியும் எவ்வளவு? தற்கொலை புரிந்து கொண்டவர்கள் எவ்வளவு? இவையும் மதத்தால் விளைந்த தீமையன்றோ?

அறியாத பாமரமக்கள் நோயின் வாய்ப்பட்டு வருந்துங்கால் கடவுளின் மீது பாரத்தைப்போட்டு வைத்தியரின் உதவியை நாடாது வாளாயிருந்து துன்பமுறுவார் கோடிக்கணக்கு. வைசூரி நோய், பிளேக் வியாதிவந்த கிராமத்தார் மாரியம்மனின் திருவிளையாடல் என்று உன்னி துக்க சாகரத்திலாழ்வார் கணக்கிலடங்காது.

எந்த ஆஸ்திகனாவது கடவுளின் உண்மைத் தத்துவத்தைக்கண்டறிந்தேன் என்று உண்மையாக, சத்தியமாகத்தன் நெஞ்சின்மீது கையை வைத்துச்சொல்லட்டும். கோயில்களில் சுவாமியின் முன்பு நின்று மனம் நைந்து கனிந்து பாடுபடுவது கடவுளின் உண்மைத்தத்துவத்தை அறிந்தா, அல்லது இலை பூக்களாலும் ஆடையாபரணதிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் ஒய்யாரத்தைக்கண்டா, அல்லது வாசனை திரவியங்களின் நாற்றத்தை முகர்ந்தா, அல்லது நாதசுரம் முதலியவற்றின் கானத்தைக்கேட்டா?

ஆகவே கடவுளாலும் மதத்தாலும் விளைந்த தீமைகள் கணக்கில்லை, கடவுளும் மதமும் நன்மைக்கென உண்டாக்கப்பட்ட காலாகாலத்து கிணறு வெட்ட பூதம் புறப்பட்டாற் போல் கடவுளாலும், கடவுளைச் சார்ந்தவர்களாலும், தீமையேயொழிய நன்மை ஏற்பட்டபாடில்லை.

கடவுளும் மதமுந்துலைந்தது என்று உலக மக்கள் கடவுள் பயத்தாலல்லாமல் அன்பின் குணத்தினாலேயே பிறருக்கு தீமையை விலக்கி நன்மையே புரிகிறார்களோ அன்றுதான் நாம் உயர்ந்த மானிடப்பிறவி எடுத்தவராகக் கருதப்படுவோம்; இல்லாதவரை கேவலம் மிருகங்களே. என்று கடவுளை விலக்கினோமோ அன்றே அன்பு, நமது இருதயகமலத்தே தோன்றித்தாண்டவமாட ஆரம்பிக்கும். என்று நமது நுண்ணிய பகுத்தறிவாலும் உண்மைச்சாஸ்திரவாயிலாகவும் ஆராய்ச்சி செய்து கடவுளைத்தவிர்த்தோமோ, அன்றே தெரிந்தோம் 'அன்பே தெய்வம்' என்று அன்றே க்ஷேமமுற்றோம், என்று உலகிலுள்ள மாக்களாகிய நாம் அஞ்ஞானத்தினின்றும் விலகி மெஞ்ஞானத்தின் வயப்பட்டு கடவுள் என்பதும் மதம் என்பதும் பகுத்தறிவற்று காட்டுமிராண்டிகளாக நாம் திரிந்தகாலத்து ஏற்பட்ட பூச்சாண்டிகள் என்று உணர்ந்தோமோ அன்றே க்ஷேமமுற்றோம்.

---

## கொழும்பு பொதுக்கூட்டம்.

கொழும்பு கும்பனித்தெரு வெக்சல் வீதி 12 நெம்பர் இல்லத்தில் திருநெல்வேலி ஜில்லா கோட்டங்கருங்குளம் வாலிபர் சீர்திருத்த சங்கத்தின் பொதுக்கூட்டம் 9-8-32ந் தேதி நடைபெற்றது. தோழர் எம். ஏ. பொன்னையா அவர்கள் தலைமை வகித்தார் அது சமயம் பலதோழர்கள் சொற்பொழிவாற்றினர்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்.)

# அருப்புக்கோட்டை தாலூகா தாழ்த்தப்பட்டார் 3-வது மகாநாடு.

## க. அ. புன்னைமுத்து சொற்பொழிவு.

அழகிய நல்லூரில் கூடிய அருப்புக்கோட்டை தாலூகா மூன்றுவது தாழ்த்தப்பட்டார் மகாநாட்டை ஆரம்பிக்கும்முகத்தான் கல்லூரணி தோழர் க. அ. புன்னைமுத்து அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்:—

தோழர்களே!

நமது நாடு சித்தர்கள் பிறந்த நாடு, செழுமை, வளமை பொருந்திய நாடு, கடவுள்கள் அவதரித்து திருவிளையாடல்செய்த நாடு, காளைமாட்டிலும், கருடபக்ஷியிலும், கடவுள்கள் தோன்றி காட்சியளித்த நாடு, அறம்வளர்ந்த நாடு என்றெல்லாம் எழுத்தளவில் புகழக்கூடியதாயிருக்கிறதேயன்றி;—அதுவும் நம்மில் சிலர்களால் தற்பெருமை பாராட்டிக் கொள்ளக் கூடியதாயிருக்கிறதேயன்றி,—உலகத்திலுள்ள ஏனைய நாடுகளின் முன் நமது நாடு மிகமிக பிற்போக்குடையதாகவே காணப்படுகிறது. இந்த விஷயத்தை நீங்கள் பரீட்சிக்க விரும்பினால் மனிதனை மனிதன் தொடக்கூடாது, குளங்களில் கிணறுகளில் குளிக்கக்கூடாது, குடிஜலம் எடுக்கக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது என்பவை போன்ற கொடுமையும், ஒருதேசத்தில் பிறந்து அதே தேசத்தில் வசிக்கும் ஒரே ஒரு மனித ஜாதியில் ஆயிரக்கணக்கான ஜாதிவேற்றுமைகளும், நபர் 1-க்கு சராசரி $1\frac{1}{2}$ அல்லது அதற்கு மேற்பட்ட விகிதாச்சாரத்தில் 35-கோடி ஜனங்களுக்கு 60 அல்லது 70-கோடி கடவுள்களும், சாமிகளும், 100-க்கு முறையே 90-வீதமும், 97-வீதமும் எழுதப் படிக்கத் தெரியாத ஆண் பெண் தற்குறிகளும், சராசரி ஒரு வேளை கஞ்சிக்குக்கூட தகுமானதாயில்லாத அவ்வளவு குறைந்த 0-1-6 சம்பாத்திய முடைய ஜனங்களும், வந்த நோய்க்குத் தகுந்த சிகிச்சை செய்துகொள்ளாமல், புழுத்து நாற்றமெடுத்த ஜலத்தைத் தீர்த்தமென்று குடித்து அதிக நோய்களுக்காளாகி மரிக்கின்றவர்களும், இந்தியாவைத் தவிர வேறெந்த நாடுகளிலாவது உண்டாவென்று யோசித்துப்பாருங்கள்.

இன்னும், பெண்களைக் கேவலம் மிருகங்களைப்போல் மதித்து இஷ்டப்படாத ஆண்களுக்கு விலக்குவிற்று கஷ்டநஷ்டப்படும், ஜனங்களையுடையவொரு தேசம், நாங்கள் கடவுள் முகத்திலிருந்து பிறந்தோம், நீங்கள் ஏனையகீழுறுப்புகளிலிருந்து ஜனித்தீர்கள் என்று சொல்வதும், சொல்வதை ஒப்புக்கொள்வதுமாகிய ஒரு நாடு, பூமியைத் தலை ஆயிரம் உள்ள பாம்பு தாங்கி நிற்கிறது, பூப்படையாத பெண்ணை சூரியன் புணர்ந்து பிள்ளை பிறந்தது, ஒரு குரங்கு வெகு ஆழ நீளமாக ஆகாயமளாவ உருவந்தாங்கினது, நெருப்பாற்றில் மயிர்ப்பாலம் இருக்கிறது, என்பவைகள்போன்ற மூட நம்பிக்கைகளையுடைய மக்கள் வசிக்கும் பகுதி, இந்தியாவைத்தவிர வேறெந்தத் தேசங்களின் பெயரையாவது விரல்நீட்டிச் சொல்ல யோக்கியதையிருக்கிறதா என்று கேட்கிறேன். ஆகவே எல்லா விஷயங்களிலும் நமது நாடு பிற்போக்குடைய நாடு என்று அழுத்தமாக முடிவுகட்டுகிறோம்.

### அரசியல்.

அன்பர்களே!

நமது நாட்டில் ஆட்சி செலுத்தும் பிரிட்டிஷ் அரசியல் என்றாலே நம் தேசத்து ஜனங்களில் ஒரு சிலருக்கு வேப்பங்காயாயிருக்கிறது. நம் தேசம், இக்காலமட்டும், (அன்னிய ராஜாங்கம் என்று சிலர்களால் சொல்லப்படுகிற) பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆளுகைக்குட்படாமல், இந்திய சுதேச ராஜாக்களாலேயே ஆளப்பட்டு வந்திருக்கக்கூடுமானால், இன்றைய இந்தியாவில் 35-கோடி ஜனங்கள் பல்கியிருப்பார்களா? இவ்வளவு வசதியான போக்குவரத்து சாதனங்களேற்பட்டிருக்க முடியுமா? ஆஸ்பத்திரிகளும், கல்விச்சாலைகளும் நாடெங்கும் நிர்மாணிக்கப் பட்டிருக்குமா, தாழ்த்தப்பட்டவர்கள் என்றாவது ஒரு ஜனசமூகம் நாட்டுப் பிரதேசங்களில் வசிக்க முடியுமா? என்று யூகித்துணர்ந்து பாருங்கள்.

அறிவாளிகளாகிய 8000ம் பேர்களை கழுவிலேற்றிக் கொல்லப்பட்டதும், புருஷன் இறந்துபோனால் உயிரோடுள்ள மனைவியையும் துள்ளத்துடிக்க உடன்சேர்த்து எரிக்கப்பட்டதும், பார்ப்பனரோடு சரி ஆசனத்தில் உட்கார்ந்த நம்மவர்களைக் குண்டிகளை அறுக்கப்பட்டதும், பார்ப்பனர் தவிர ஏனையோர் வேதத்தை (கபடப்பொக்கிஷத்தை) எடுத்தால் கையைத் துணித்ததும், படித்தால் வாயில் சுடுகம்பியைச் செலுத்தியதும், பார்த்தால் கண்ணைக்குத்தியதும், நினைத்தால் நெஞ்சை வகிர்ந்து, வகிர்ந்துவிட்டதுமாகிய அனியாயக் கொடுமைகளெல்லாம் (அன்னியர் ஆட்சி என்கப்பட்ட) பிரிட்டிஷ் ஆட்சிகாலத்திற்கு முந்திய இந்தியாவில், இந்திய சுதேச ராஜாக்கள் ஆட்சி செலுத்திய சுயராஜ்ஜியத்தில் தானே நடந்திருக்கின்றன. இக் கொடிய செய்கைகள் எல்லாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசியல் இந்தியாவில் ஸ்தாபனமானபின்பன்றோ ஒழிந்தன.

ஆனால், பசிக்குணவளித்தவர்கள் போதுமானமட்டும் உணவளித்தார்களா என்பது போல கொடிய கோர சம்பவங்களையெல்லாம் சட்டதிட்ட அதிகாரங்களால் ஒழித்த இந்தியாவை கூடுமானமட்டும் சீர்திருத்திய பிரிட்டிஷ் ராஜாங்கம், இந்தியாவில்; மதங்களின் ஆட்சியாலும், புரோகித சூட்சியாலும், ஜாதிபேத வெறியினாலும், மனிதர்களுக்கு மனிதர் ஏமாற்றப்படுவது, தாழ்த்தப்படுவது, கொடுமைப்படுத்தப்படுவது ஆகிய—பற்பல கொடுஞ்செயல்களையெல்லாம் என் சட்ட திட்டங்களின் மூலம் ஒழித்து பூரண சீர்திருத்தம் செய்திருக்கவில்லையென்பதைத் தவிர பிரிட்டிஷ் ராஜாங்கம் இந்தியாவுக்குச் சாதித்த நன்மைகளை நியாயமும் அறிவுமுடைய யாராவது நன்றி மறப்பார்களா என்றுதான் கேட்கிறேன்.

எனவே வர்ணாச்சிரம அதர்மவெறியும் மதத்திமிரும் கொண்ட இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ராஜாங்கம் இன்றியமையாத பெருஞ்செல்வக்களஞ்சியமென்றே சொல்லுவேன்.

### காங்கிரஸ்.

நண்பர்களே!

அடுத்தபடியாக, காங்கிரஸ் யோக்கியதையைப் பற்றி சற்று சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ், இந்தியாவுக்குப் பொதுவாக உழைக்கும் ஸ்தாபனம்போல் வெளித்தோற்றத்தில் விளம்பரப்படுத்தி, எந்த வகையிலாவது இந்தியாவை தம் அதிகார ஆட்சிக்குட்படுத்திவிட வேண்டுமென்ற சூழ்சிக்கொள்கையுடைய சதிகாரர் சபையாகத்தான் காணப்படுகிறது. வடஇந்திய ஹிந்து பிரபுக்களில் சிலர்களுடைய பேராசையைப்பூர்த்திசெய்வதற்காகவே, இந்த காங்கிரஸ் வேலை செய்துவருகிறது என்று சொல்ல நான் தயங்கமாட்டேன். காந்தி என்பரோ, பொது மக்கள் நலங்கோரி உழைத்த காங்கிரஸில் இப்போதிருக்கிற சூட்சிக் கொள்கையை வித்திட்டுப் பயிராக்கியமகான் என்றும், தரப்பு வக்கீல் என்றும் தாராளமாகக் கூறுவேன். அவர்போதித்த அஹிம்சாதர்மமோ, மிருக சுபாவத்திற்கும் மனித சுபாவத்திற்கும் மத்தியிலுள்ள மானங்கெட்ட அர்த்தமற்ற சண்டிச்செய்கை யென்று தெரியுங்கள். இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டு பிரயாணத்தின்போது ராஜபுதன கப்பலில் அவர்செய்த வீரகர்ஜனையோ இந்தியப்போது மக்களையும், மகாநாட்டிற்குச் செல்லும் ஏனைய இந்தியப் பிரதிநிதிகளையும் மயக்குவிக்கக் கூறிய பசப்புதலான வார்த்தைகளென்று அறியுங்கள். அவர் பிரஸ்தாபித்த ராம ராஜ்யமோ, தாழ்த்தப்பட்ட மக்களை நாட்டைவிட்டு காட்டிற்கு ஓட்டும் ராஜ்யமென்று உணருங்கள், காங்கிரஸின் மதாடு நிலைமைத்திட்டமோ, பொதுமக்கள் கண்விழித்துக்கொள்ளாதவாறு செய்த மோசமென்று கொள்ளுங்கள். கதர் பிரசாரமோ, காங்கிரஸின் சத்தியாலோசனைத்தலைவர்களில் சில மில் முதலாளிகள் சூட்சமமென்று தெளியுங்கள். காங்கிரஸிலுள்ள பார்ப்பனர்களோ எத்திப்பிழைக்கும் இயல்புடைய கண்காணிகள் என்று நிச்சயித்துக்கொள்ளுங்கள். அதிற்கலந்த நம்மவர்களிற் சிலரோ, இந்த ரகசியங்களையெல்லாம், அறிந்திராதவர்களாய் தலைகொடுத்தவர்கள் என்று கண்டு கொள்ளுங்கள்.

இவ்வுண்மைகளை யெல்லாம். ராஜாங்கத்தார் அறிந்திருக்க மாட்டார்களென்று நினைத்து விடாதீர்கள். தெரிந்திருக்க மாட்டார்களென்ற சந்தேகமுடையவர்கள், முதலாவது வட்டமேஜை மகாநாட்டில் மன்னர் பிரான் திறந்து வைக்கும்போது ஆற்றிய பொன்மொழிகளைப்பாருங்கள்.

எனவே இவ்வளவு சூட்சியும்,மோசமுமுடைய ஒரு ஸ்தாபனம் (காங்கிரஸ்) இருப்பதிலும் தொலைவது மேலல்லவா.

### சுயமரியாதை இயக்கம்.

அறிவாளர்களே!

சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும், இயக்கத்தின் கொள்கைகளைப் பற்றியும், பகுத்தறிவுள்ள உங்கள் முன்னால் நான் அதிகம் சொல்வதற்கில்லை. சுயமரியாதை இயக்கமானது உலகமுழுவதும் அறிவாளர்களிடம் செல்வாக்குப் பெற்று சிறந்த இயக்கமாக இருந்து வேலைசெய்கிறது. ஒருவரை யொருவர் வஞ்சித்து வாழ வேண்டுமென்ற சூட்சியோ, ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி வழங்கும் அநியாயமோ, கருப்பர், வெள்ளையர், என்ற நிறபேதமோ, தன்னாட்டார் அயல் நாட்டார் என்ற பாகுபாடோ, ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமோ, உயர்வு தாழ்வும் வேற்றுமையும் கற்பிக்கும் ஜாதி பேதமோ, இந்த சுயமரியாதை இயக்கத்திற்கில்லை. மோட்ச நரக மென்பதாதி மூடநம்பிக்கைகளோ, கடவுள், கடவுள்கள் பசாசுகள் என்பவை போன்ற அர்த்தமற்ற கற்பனைகளோ, இந்த இயக்கத்திலுள்ள உண்மையாளர்களுக்கில்லை. இந்த இயக்கமானது அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் அனுபவத்திற்கும், காரியத்திற்கும் உதவாத எந்தக்கொள்கைகளையும், ஸ்தாபனங்களையும், பின்பற்றுவதோ, பராமரித்துவருவதோ, அவர்களுக்கு முயற்சியெடுப்பதோ, செலவு செய்வதோ, வீண் வேலையென்று பொது மக்களுக்கு அவை எடுத்துக்காட்டுகிறது. விதவைத்தன்மையை ஒழியுங்கள், தீண்டாமையை மண்டையிலடியுங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றத்திற்கு உதவிசெய்யுங்கள் என்று

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# தமிழா! எழுந்திரு.

(தோழர் எஸ். ஆர். அத்தியப்பன்)

விஞ்ஞான சூரியன் தன் கிரணங்களைப் பரப்பி எல்லா தேச மக்களையும் தூக்கத்தினின்றும், எழுப்பிவர, தமிழா! நீ மாத்திரம் ஏன் இன்னும் உறங்கிக்கொண்டிருக்கிறாய். சுதந்தர சூரியனின் கதிர்களை மேலே தேசத்து மக்கள் கண்டு களிக்க, தமிழா! நீ சுதந்தரம் என்றால், கறுப்பா, சிகப்பா! என வினவும் நிலைமையிலிருக்கிறாய். அந்தோ! நினது அறிவுதான் என்னே! தமிழா! நீதான் என் செய்வாய். உன் பாட்டன், தகப்பன் முதலாயினோர் அடிமை இரத்தத்தில் உதித்தவனாக இருக்க, உனக்கு சுதந்தர உணர்ச்சி உண்டாவது என்பது விரைவில் முடியக்கூடிய காரியமா?

அறிவுச் சுடர் கொளுந்து விட்டெரியும் இக்காலத்தில், மனிதன் மனிதனாக வாழவேண்டுமென்னும் இக்காலத்தில், மனிதனை, மனிதனாகவே மதிக்கவேண்டுமென்னும் இக்காலத்தில் நீ, ஒரு சாராரைக் கண்டால் 'தோட்டக்கும்பிடு தொண்ணூறும்' போடுகின்றாய். அங்ஙனம் போடுவதனால் உனக்கு ஏதாவது பயன் உண்டா? இல்லையோ, மென்மேலும் அவன் உன்மீது குதிரை போன்று நினைத்து, சவாரியன்றோ செய்கின்றான். அவன் மூட்டைப் பூச்சி போன்றல்லவோ உன் இரத்தத்தை, ஆவியை தினந்தோறும் குடிக்கின்றான். ஆனாலும் நீ எதிர்க்காவண்ணம் நாய்க்கு எலும்பு போடுவது போன்று சிறிய உதவி செய்கின்றான். நீ அதைப் பெரும் பாக்கியமாக நினைத்து அவன் காலடியில் கிடந்து, காலாவிட்ட வேலையை தலையால் செய்கின்றாய். நீயா சுதந்தர வாழ்வைப்பெறப்போகின்றாய்?

தமிழா! கூறுவதை சற்று செவி சாய்த்துக் கேட்டு, பகுத்தறிவோடு சிந்தனை செய்து பார்க்கவேண்டும். அப்பொழுது உண்மை தெற்றென விளங்கும். (நம்) நாட்டில், நாம் எத்துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம்? என்பதை நினைத்துப்பார்? படித்தவர்கள் நூற்றுக்கு எத்தனை பேர்கள்? அதில் பெண்கள் எத்தனை பேர்கள்? (கைத்) தொழிற்சாலைகள் எத்தனை இருக்கின்றன? கல்விச்சாலைகள் எத்தனை இருக்கின்றன? வைத்தியசாலைகள் எத்தனை இருக்கின்றன? ஆராய்ச்சிசாலைகள் எத்தனை இருக்கின்றன? ஆ! தமிழா!! இரத்தம் கொதிக்கவில்லையா? (நீ சுத்த தமிழன் அல்லவா?) நாம் எந்த துறையில் தான் முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம்? இருட்டில் அடைபட்டிராதே! வெளியில் வந்து, கண்ணைத் திறந்துநிமிர்ந்துபார்?

திருமாலுக்கு ஆலயங்கட்டினால் மோக்ஷம் கிடைக்குமா? சிவனுக்கு, குமாரனுக்கு ஆலயங்கட்டினால் மோக்ஷம் கிடைக்குமா? சுவாமியை செம்பால் செய்து வைப்பதா? வெள்ளியால் செய்து வைப்பதா? வைரமுடி செய்து வைப்பதா? பிராமணனுக்கு கோதானம் கொடுப்பதால் பாபந்தீர்ந்து மோக்ஷம் பெறலாமா? ஆயிரம் பிராமணனுக்கு அறுசுவை உண்டி அளித்தால் 'சாலோகம்' கிடைக்குமா? குழந்தைகளுக்கு இராமன் பெயரை வைப்பதா? சிவன் பெயரை வைப்பதா? நாமம் போடுவதா? விபூதி வைத்துக்கொள்ளுவதா? தேவாரம் படிப்பதா? திருவாய்மொழி, பிரபந்தம் படிப்பதா? பெரிய புராணம் படிப்பதா? என்ற ஆராய்ச்சிதமிழனுக்கு இன்னும் தீர்ந்தபாடில்லை.

தமிழ் போச்சு, சைவம்போச்சு என்ற கூச்சல் பண்டிதர்களிடையே எழுகின்றது. இந்த பண்டிதர்கள்தமிழ் மொழி வளர்ச்சிக்கு என்ன செய்தார்கள்? ஒரு தலபுராணமும், தோத்திரம், துதிகளும், பாடிவிட்டு; கம்பராமாயணத்தின் நயத்தையும், சிந்தாமணியின் சிறப்பையும், மணிமேகலையின் மாண்பையும், புறநானூற்றின் வீரத்தையும், அகப்பொருளின் இன்பத்தையும், வானளாவி எழுதுவதனால், மேடை பிரசங்கம் செய்வதனால், நாட்டுக்கும், மொழிக்கும் சிஞ்சிற்றேனும் பயனுண்டா? என வினவுகின்றேன். அந்தக் காலத்தில் மணிமேகலையும், இராமாயணமும் சிறப்புடைத்தாய் இருந்திருக்கலாம். இப்பொழுதும் அதை அப்படியே ஒப்புக்கொள்ளவேண்டுமென்றால், மனிதன் பகுத்தறிவை எங்கு வைத்துவிட்டு வந்து விட்டான் என்ற வினா எழுமல்லவா? இந்த இருபதாம் நூற்றாண்டில் நிகழும் காரியங்கள் யாவும் வியப்பைக்கொடுக்கும் வண்ணமாகவிருக்கின்றன. ஆனால், இன்னும் சில நூற்றாண்டில், இவைகள்சென்று மனிதன் கனவிலும் நினைக்க முடியாத பல அற்புத செயல்கள் நிகழ்வதைப் பார்க்கலாம். 'இருபதாம்நூற்றாண்டில் தான் அரிய பெரிய காரியங்கள் செய்தார்கள். அதைத்தான் நாம் போற்றவேண்டும். அவர்களை விட இப்பொழுதுள்ளவர்கள் எதைக் கண்டு பிடித்து விட்டார்கள்' என்று ஒருவன் அக்காலத்தில் கூறினால் அவனைக்கண்டு எல்லோரும் எள்ளி நகையாட மாட்டார்களா? விஞ்ஞான உலகம் தினே தினே விருத்தியாகிக் கொண்டே வருகின்றது. ஒவ்வொரு நிமிடமும், ஒரு புது உலகமாகவே மாறுகின்றது. இன்றைக்கு உயிரற்ற பொருள்கள் என்பவற்றைநாளையதினம் உயிருள்ள பொருள்தான் என்று கண்டுபிடிக்கப்படுகின்றது. இங்ஙனம், காலம் வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் போது, அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருத்தமற்ற பொருளின்மீது நம்பிக்கை வைப்பதென்பது என்ன அறிவீனம்?

தமிழ் மொழி வளர்ச்சிக்கு தமிழ் பண்டிதர்களும், தமிழ் சைவப் பெரியார்களும் என்ன வழி கோலினார்கள்? தமிழ் மொழியை காப்பாற்றத் தோன்றிய மடங்கள் என்ன சாதித்தன? என்பது நமக்கு விளங்கவில்லை. தமிழ் மொழியை சிவபிரான் அகத்தியனுருக்கு உபதேசித்தார். அகத்தியனார் தமிழில் இலக்கணம் வகுத்தார். சிவபிரானிடமிருந்து வந்த தமிழ் மொழியில் எல்லா நூல்களும் இருந்தனவாம். ஆனால் அவற்றைக் கடல் கொண்டனவாம். என்னே! தமிழின் கதி. என்னே!! தமிழ் நாட்டின் கதி. சிவபிரானிடமிருந்து வந்த செந்தமிழ் மொழியில் உள்ள பதங்கள் பல நாளடைவில் குறைந்து அந்நிய மொழி பதங்கள் புகுந்து தலை தூக்கி நிற்கின்றன. ஆனால் தமிழன் தமிழில் இல்லா ஒரு பொருளின் பதத்தை ஆங்கிலத்தில் அழைக்க இசைந்தானில்லை. ஒரு மொழி சர்வேசுவரனிடமிருந்தோ? முழுமுதற் முனைவனிடமிருந்தோ? சிவபிரானிடமிருந்தோ பூலோகத்திற்கு அனுப்பப்பட்டதென்பது வீண் புரட்டாகும். சிவபிரானால் அனுப்பப்பட்ட தமிழ் மொழியைவிட எந்த மொழிக்கு மகத்துவம் அதிகமிருக்கின்றதென்று தமிழன் இறுமாந்திருக்கின்றான். 'எலும்பை பெண்ணாக்கியது தமிழ்மொழி, முதலையுண்ட பாலனை அழைத்தது தமிழ்மொழி, கதவைத் திறந்தது தமிழ்மொழி, சமணர்களை வெ(கொ)ன்றது தமிழ் மொழி', என தமிழன் வாய்ப்பறை சாற்றுகின்றான். தேவனாலும், முனிவர்களாலும் உண்டாக்கப்படாத ஒரு மொழி (ஆங்கிலம்) மக்கள் உள்ள நாடுகள் தோறும் சென்று ஆதிக்கம் பெற்று வருகின்றது. இறைவனாலும் முனிவனாலும் அருளப்பட்ட தமிழ் மொழி ஏன் இன்று குற்றுயிரிலிருக்கின்றதென்பது விளங்கவில்லை. அந்த சிவபிரானும், அகத்தியனாரும் ஏன் தமிழின் வளர்ச்சி கருதி இன்று ஒன்றும் வந்து செய்யவில்லை?

தமிழ் மொழி வல்லுநர் 'தமிழ் மொழியே ஆதியில் தோன்றியது, மற்றமொழிகள் அதிலிருந்து தோன்றியதாகும்' என்கின்றார்கள். தமிழன் தமிழையே உயர்ந்ததென்பான். தெலுங்கன் தெலுங்கையே உயர்ந்த தென்பான், தன்னைத்தானே உயர்ந்தவன் எனக்கூறிக்கொள்ளுவதில் ஆச்சரியந்தான் என்ன இருக்கின்றது? தமிழன் மலையாளத்தையும், தெலுங்கையும நேற்று பிறந்தது என்கின்றான். நேற்று பிறந்த அம்மொழிகளிலுள்ள நூல்கள் தமிழ் மொழியிலுண்டா? தத்துவசாத்தரங்களும், விஞ்ஞான நூல்களும், ரசாயன நூல்களும், தினே தினே அந்த நேற்றுப்பிறந்த மொழிகளில் தோன்றுகின்றதே, படைப்பு காலந்தொட்டு வழங்கிவரும் தமிழ் மொழியில் ஏன் அவைகள் பிறக்கவில்லை?

தமிழா! மொழி ஒருவருக்குச்சொந்தமானதன்று என்பதை மனதில் பதிய வைத்துக்கொள். தாய் மொழியென்று கதறாதே! தாய்மொழியானாலும் சரி மனிதனுக்கு வீரத்தையும், அறிவையும், அன்பையும் சமத்துவத்தையும், பகுத்தறிவையும் கொடுக்காத தாய் மொழியால் நீ அடையப்போவதுதான் என்ன? மனிதனை மனிதனாக மதிக்கச்செய்யும் மொழியே மக்கள் கூட்டத்தில் நின்று நிலவவேண்டும். (அவையல்லாத, மற்ற மொழிகள் இருந்தால் என்ன? இறந்தால் என்ன? தாய் மொழி சிறப்படைய வேண்டுமானால், மொழி சீர்திருத்தம் செய்தல் வேண்டும். 'பழையன கழிந்து புதியன புகுதல்' வேண்டும். மற்ற மொழிகளிலுள்ள உயர்ந்த நூல்களை மொழி பெயர்த்தல் வேண்டும். இதுவன்றோ தாய் மொழிக்கும், தாய் நாட்டிற்கும் செய்யும் உண்மைத்தொண்டு. துறையூரில் கூடிய தமிழர் மகாநாட்டில்: "ஆங்கிலம் முதலிய உயர்ந்த மொழிகளிலுள்ள விஞ்ஞானம், இலக்கியம், கணிதம் முதலியவற்றை மொழி பெயர்த்தெழுதவேண்டும்" என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறிற்று. ஆனால் நம்நாட்டு, தமிழ் ஆங்கிலம் படித்திருக்கும் பி. ஏ., எம். ஏ., மற்ற தொடர் எழுத்துக்களுடன் கூடியவர்கள், கம்பராமாயணமும், தேவார திருவாசகமுமே கதியென்று கட்டியழுகின்றார்கள். இவர்களே இப்படியிருந்தால், மற்றவர்களைப்பற்றி கூறுவானேன். தமிழ் மொழிக்கு உயர்வு எங்ஙனமுண்டாகும்?

---

## "கஸ்பார்."

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆங்கரை தோழர் டி. சேவியர் அவர்களுக்கு 27—7—32ந்தேதியன்றுஓர் ஆண்மகவு பிறந்தது. அம்மகவிற்கு கஸ்பார் என்ற பெயர் வைக்கப்பட்டது. கஸ்பார் என்பவர் முற்காலத்தில் கீழ் தேசங்களுக்குள் தார்சீஸ் என்னும் தேசத்தில் விளங்கிய அரசனின் பெயராகும். (ஒரு நிருபர்)

---


## பெண் தேவை.

சுமார் 22 வயதுள்ளவரும், திடகாத்திரமுள்ளவரும் முனிசிபல் கௌன்சிலரும் போதுமான பூஸ்திதிஉள்ளவரும் நல்ல அழகுள்ளவரும் இதுவரை கலியாணமாகாதவருமான ஒருவாலிபருக்கு ஒரு பெண் தேவை. விரும்புகிறவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு கடிதம் எழுதித்தெரிந்து கொள்ளவும். கடிதம் ரகசியம்

Appar C|o Kudi Arasu
Erode

# கடவுள் வெறியும், மதவெறியும்.

[தோழர் அ. இராகவன்]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஐந்தாவது நூற்றாண்டில் எபிஸியஸ் என்னுமூரில் நடந்த பெரிய பாதிரிகள் கூட்டத்தில் பிளேவியஸ் என்னும் பாதிரியார் கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பேசினதுபற்றி உதைத்துக்கொல்லப் பட்டார். அவர்கட்சியில் சேர்ந்தவர்கள் பலர்அடிபட்டார்கள்.

1229-ஆம் வருஷத்தில் தொலூஸ் என்னுமூரில் நடந்த பெரிய கூட்டத்தில் ஊர்கள் தோறும் கூட்டங்களேற்படுத்தி ஒவ்வொருகூட்டத்திலும் ஒரு குருவும் இரண்டு சிஷர்களும் இருக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அக்கூட்டத்தார், அந்த ஊரில் கிறிஸ்தவர்களாகாதவர்களைப் பிடித்து கிறிஸ்தவர்களாக்கவும், ஆகமாட்டோமென்பவர்களைக் கொலை செய்ய வேண்டும். இதற்கு மேல் விசாரணைக் கருத்தா 9வது கிரேகிரி (Gregory Ix) யாம், கிறிஸ்தவராகாதவர்களை நிர்வாணமாக நிறுத்துதல், மொட்டையடித்தல், வேதனை செய்யும் யந்திரததில் படுக்கவைத்துக் கட்டல், அதிலேயே கால்களை விரித்துவைத்துக்கட்டல், சதை நசுங்க உடலை யந்திரத்தில் வைத்தழுத்தல் முதலிய கொடுமைகளை ஷை கூட்டத்தாரும் அவர்களைச் சார்ந்து பின் வந்தவர்களும் செய்தார்களென சிவிலி மென்னுமூருக்கு விசாரணைத்தலைவனாயிருந்தவனின் கைப்புத்தகத்தில் வரையப் பட்டிருந்தது, இதன் விரிவை டாக்டர் ரூல் (Dr Rule) என்பவரால் எழுதப்பட்ட ஷை விசாரணைச்சரித்திரத்தில் காணலாம். (Appendix to vol. I-P. 339 to 359 Fd. in 1874) ஆளை வைத்து அழுத்திக்கொல்லத்தக்க (Chevolt) என்னும் யந்திரத்தில் பிகுவாயழுத்தித்துணியை தொண்டைவரையிலழுத்திக்கொல்லல் முதலியன செய்தார்கள்.

1502-ம் ஹு பிப்ரவரி மீ-த்தில் ஷை ஸ்பெயின் தேசத்தில் பெர்டினண்ட் (Ferdinand) என்னும் அரசன், தன் ஊரில் நெடுங்காலமாகக் குடியிருந்த முஸ்லீம்களில், கிறீஸ்து மதஸ்தர்களாகமாட்டோமென்று சொன்ன (3, 000000) முப்பது லக்ஷம் முஸ்லீம்களை ஊரைவிட்டு எப்ரல் மீ த்திற்குள் போகவேண்டுமென்றும், அப்படிப்போகாதவர்களை கொலை செய்யப் படுமென்றும், பொன் வெள்ளி முதலிய சொத்துக்களை எடுத்துக் கொண்டு போகப்படாதென்றும், இன்னும் பற்பல வுத்தரவுகளையும் பிறப்பித்தான். அங்ஙனமே பிதுராஜ்ஜிதமான எல்லாச்சொத்துக்களையும் இழந்து ஐயோவென்று அழுது புலம்பிப்போய்விட்டார்கள்.

ஸ்காட்லாண்டு தேசத்தில் 1670ம் ஹுத்தில் உத்திரவில்லாமல் பிரசங்கம் செய்யப்படாதென்று சட்டம் பிறந்தது: 1674 ஹுத்தில் நியாயம் பேசும் அட்வக்கேட்டர்களைத்துறத்தி விட்டார்கள். 1678ம் ஹுத்தில் மலையிலிருந்த ஜலண்டர்களை வரவழைத்து அவர்கள் இஷ்டப்படி ஜனங்களைக் கொல்லவும், திருடவும் கொளுத்தவும் அனுமதி கொடுத்தார்கள். ஆயுதபாணிகளான 8000 ஜலண்டர்களைத்தருவித்து ஸ்காட்லந்து வடபாகத்திலுள்ள கிராமங்களின்மேல் பாய உத்தரவளித்தான். அவர்கள் அங்ஙனமே சென்று ஜனங்கள் சொத்துக்களைப் பிடித்து, ஸ்திரீகளை நிர்வாணிகளாக்கி அநேக அக்கிரமங்கள் செய்தார்கள். இரண்டு பேர்களை ஒன்றாகக்கட்டி, இருவர் பெருவிரலையொன்றாசேர்த்திருக்கு மரத்தில் தொங்கவிட்டார்கள். ஒரு பெண்பிள்ளையை ஜெபாலயத்தலைவன் வீட்டிற்கு அருகிலிருக்கும் (தவளை முதலிய ஜெந்துக்களுள்ள) பெரும்பள்ளத்தில் தள்ளினார்கள். ஒருத்தியை வெகுநேரம்வரையில் தீக்குச்சியை கொண்டு விரல்களைக் கொளுத்தினார்கள். இந்த உபத்திரவம் பொருக்காமல் அவள் சில நாளையில் செத்துப்போனாள்.

டார்க்விமோடா என்பவன் அதிகாரம் செலுத்தின பதினெட்டு வருஷத்திற்குள் கிறிஸ்து மதவிரோதிகளான 10, 220 பேர் உயிருடன் கொல்லப்பட்டார்கள். அவனால் சாகிறமட்டும் ஜெயிலுக்கு இரையானவர்களும், சொத்துக்களைப் பறிகொடுத்தவர்களும் 97,321 பேர்கள் (History of the inquisition by Dr. W H. Rule vol. I. Page 150) இவனே சலமான்கா என்னும் ஊரின்கண் யூதமதஸ்தர் அபிப்பிராயத்தைச் சொல்கின்றனவென, 6000 கிழ்திசை சாஸ்திரங்களை அக்கினிக்குத்தத்தஞ் செய்தான். (Draper's conflict of religion and science, page 146)

1481ம் வருஷத்தில்ஆண்ட ஹுஷிசாவில் 4 வது போப்சிக்டஸ் என்பவனால் நியமிக்கப்பட்ட விசாரணைச் சபையார் 2, 005 பேரை உயிரோடு கொளுத்தினதோடு, 17000 பேருக்கு அபராதமும், ஜன்மதண்டனையும் விதித்தார்கள். அங்கரி என்னுமூரில் பீகாட்ஸ் என்னும் ஓர்வகுப்பினரைக்கொலை செய்தவன் கிஸ்கா உஸ்ஸைட் என்பவன். என்றும் வரலாற்று நூல்களில் காணக்கிடக்கின்றன.

விக்ரகத் தொழும்பும், பெண் அடிமைத்தனமும், மூடநம்பிக்கையும், அர்த்தமற்ற அநாகரிகப்பழக்கவழக்கங்களுமலிந்து நின்ற அராபிய நாட்டிலுள்ள முரட்டுத்தனமுள்ள அராபிய மக்களிடம் முஹமத் என்னும் அறிஞர்தோன்றி சீர்திருத்தத் தொண்டாற்றிய ஞான்று அம்மூட மக்கள் அப்பெரியாரை அடித்தும் வைத்தும் இரத்தமொழுக கல்லாலெறிந்தும் கொலைசெய்ய முயன்றதுடனமையாது, அவரைப்பின்பற்றிப்போரும் சீர்திருத்த தொண்டர்களான ஹாரிஸ் என்பவரை கத்தியால் குத்திக்கொன்றதும், பிலால் என்னும் ஒரு தொண்டரை அவர் தம் கழுத்தில் கயிற்றைக்கட்டி பிள்ளைகளைக்கொண்டு உதிரஞ்சிந்த தெருத்தெருவாய் இழுத்ததுடனில்லாது அவருக்கு இருப்பு அங்கிகளைமாட்டி, அரபியநாட்டின் கொடிய வெய்யலில் நிறுத்தியும், சிற்சில சமயம் மக்காவிற்கு புறம்பேயுள்ள மணல் வெளியிற் ஆடைகளை பிடுங்கிக்கொண்டு நிர்வாணமாய்க் கிடத்திச்சரீரத்தின் மீது பாரமான கற்களை ஏற்றிவைத்தும், பலநாள் ஆகாரம் கொடுக்காமல் பட்டினிபோட்டும், மழைகாலங்களில் யாதொரு ஆடையுங்கொடாது இரவெல்லாம் முற்றத்தில் நிற்கவைத்து அடித்தும், கப்பாப் என்னும் சீர்திருத்தவாதியை நெருப்பில் முதுகுபடும்படிகிடத்தி புரண்டுவிடாதபடி நெஞ்சின்மேல் காலைவைத்து இறுத்திக் கொண்டதும், முஸ்லிம் களுக்கும் விக்ரகவணக்கக்காரர்களான அராபியாதேசத்து ஹிந்துக்களுக்குமுண்டான பத்ருசண்டை, உஹத்சண்டை, அகழ்சண்டை, கைபர்சண்டை மூத்தாத்சண்டை, தகபூக்சண்டை முதலிய போர்களில் பதினாயிரக்கணக்கான மக்கள் மாண்டதும் அப்போரில் ஹிந்தா என்ற பெண் சீர்திருத்தவாதியும் முஹம்மத் நபியின் சிறியதகப்பனருமான ஹம்ஸாஎன்பவரை வஹ்ஷி என்பவனைத் தூண்டிக் கொலைசெய்யத்தூண்டி உயிரற்ற அவ்வுடலை துண்டு துண்டாய் வெட்டி அவைகளை கோத்து மாலையாகப்போட்டுக் கொண்டதும் இன்னும் மதவெறியால் மக்களுலகிற்குண்டானபெரும் நஷ்டம் என்பதை கனம் தாவுத்ஷா ஸாஹிப் அவர்களால் வெளியிடப் பட்டுவரும் "நாயகமான்மியம்" போன்ற சரித்திர நூற்கள் சான்று பகிர்கின்றது.

இன்னும் மதப்பித்தங்கொண்ட முஸ்லிம்களாலே இஸ்லாமியா அறிஞரான இமாம் அபூஹனிபா என்பவரை சிறையிலிட்டு விஷமிட்டுக் கொன்றதுடனமையாது, அவரிறந்த பிறகு அவருடைய பிரேதத்திற்குச் செய்த கொடுமைகள் இவ்வளவு என்று எழுதவும் கைகூசுகிறது என்று காஜி நூருல்லா ஷூஸ்டரி கூறியிருக்கிறார்.

இன்னும் இமாம், ஷாபியும் "இப்லீஸ்" ராப்ஜி என இழித்துரைக்கப் பட்டு சிறையிடப்பட்டார். இமாம் இப்னுதைமியா சிறையிடப்பட்டு சிறைச்சாலையிலே மாண்டார். காஜா ஜுனைத்பக்தாதி வேட்டையாடப் பட்டார் இன்னும்பல மேதாவிகள் தம்கொள்கைகளுக்கு (மதத்திற்கு) விரோதமாயிருப்பதாய் வெட்டப் பட்டும் சித்திரவதை செய்யப்பட்டும் முதுகுத்தோலையுரிக்கப்பட்டு கொல்லப்பட்டதும் இஸ்லாமிய சரித்திரங்கள் இன்றளவும் கூறிக் கொண்டிருக்கின்றது.

நியமித்துல்லாகான் என்னும் ஓர் அஹ்மதி முஸ்லிமை ஆப்கன் தேசத்து வைதீக முஸ்லீம்கள் அரசாங்க அனுமதி பெற்று கற்களால் எறிந்து கொன்றது அம்மூடமாக்கள் கொண்ட மதப்பித்தென்பதை யாரே மறுக்கவல்லார்?

சுவாமிசிரத்தாநந்தர், ராஜபால் ஆகிய ஆரிய சமாஜிகளை இரு முஸ்லீம்கள் கொன்றது, காபிர்களை [இஸ்லாமிய விரோதிகளை) கொல்லுங்கள் என்றும், அவ்வாறு கொன்றால் உங்களுக்கு எவ்வித விசாரணையும் புரியாது சுவர்க்க வாசலைத்திறந்து வைத்து விடுவோம் என்று கடவுள் தம் வேத புத்தகத்தில் கூறியிருப்பதாக நம்பி நடந்ததும் மதவெறியன்றோ?

மேலும், '1931-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் பருக்காபாத் ஜில்லாவிலுள்ள தீர்வா என்னுமூரில் கடவுள் பித்தம்கொண்டு அங்குள்ள சமஸ்கிருத பாடசாலையில் படித்திருந்த ஓர் சிறுவன் ஸ்ரீ தவகேஸ்வர மகா தேவாலயத்தில் பாதி கழுத்தை அறுத்து இரத்தப்பெருக்கெடுத்து விழுந்து கிடந்ததைக்கண்டு சிலர் ஓடிப் போய் பார்த்ததில் அவன் தன் முன் நிற்கும் ஜனங்களை நோக்கி பரமசிவனுக்கு தனது தலையைச்சீவி பலியாக அர்ப்பணம் செய்துவிட்டதாகக் கூறினான். (சண்டமாருதம் 2-9-31) ஆகவே இவனை கலியுக கண்ணப்பன்—இல்லை அவனுக்கு மேற்பட்டவர் என்று கூறினும் கூறலாம். கண்ணப்பருக்கு காட்சியளித்த கண்ணையீய்ந்த கடவுள் இது போழ்து ஒழித்துக்கொண்டதேனோ? அந்தோ! மக்களின் கடவுளின்வெறி!

கிழக்கு வங்காளத்திலுள்ள பாங்குரா என்னுமிடத்தில் ஜுரத்தால் மரணமாகிப்புதைக்கப்பட்டிருந்த ஒரு குழந்தையின் பிரேதத்தை தோண்டி எடுத்துக்கறிசமைத்து சாப்பிட்டதாக அஜீத் பேஷலால் என்ற குல்ன ஜில்லா வாசி ஒருவர் பேரிலும் பங்குராவாசி சக்கா ஆச்சாரியா என்னும் மற்றொருவர் பேரிலும் இ. பி. கோ. 297-வது பிரிவின்படி பங்குரா சப்டிவிஷனல் ஆபீசர் ராவ்சாகிப் சஷிபூஷன் பாட்டாச்சாரியா என்பவரிடம் கேஸ் தொடுத்து விசா

ரிக்கப்பட்டு தண்டனையடைந்தார்கள். விசாரணையின்போது அப்பிரேதத்திற்கு பூஜை முதலானவைகள் செய்து புஷ்பங்களால் அலங்காரம் செய்து, மது அபிஷேகம் புரிந்து சாப்பிட்டதாகத்தெரிந்தது. அவ்வெறியிலொருவன் கோர்ட்டில் 'நான் குல்லு ஜில்லாவைச்சேர்ந்தவன். நான் சந்நியாசி வாழ்க்கை நடத்தி வருகிறவன் நான் பாண்டுரா சென்றேன், அங்கு ஜனங்கள் என்மீது அதிகபற்றுடையவர்களானார்கள். அவர்கள் என்னைச்சாதுவென்று பூஜித்து வந்தார்கள். நான் குழந்தையின் பிரேதத்தை எடுத்து கறி சமைத்தேன். ஆனால் நாய்க்கு கொடுப்பதற்காக அக்கறியை சமைத்தேன். அக்குழந்தையின் ஹிருதயத்தை நானும் கொஞ்சம் சாப்பிட்டேன், குழந்தையின் ஹிருதயத்தை சாப்பிடுவது எனது மதக்கொள்கை என்று நான் நம்பினேன், ஆதலால் அவ்விதம் செய்தேன்' என்று வாக்குமூலம் கொடுத்த விஷயங்கள் (சண்டமாருதம் பத்திரிகையில் 6-9-31லும் மற்றும்பல தினசரிகளிலும் வெளிவந்தது) சிறுத்தொண்டரிடம் பிள்ளைக்கறி கேட்ட பரமசிவன் பிள்ளைக்கறியின் ஆசையால் இக்கலிகாலத்தில் ஒருவரும் தம்பிள்ளையைக் கறிசமைக்கக்கொடார் என்று கருதி பிரேதத்தை எடுத்துச்சாப்பிட்டார் போலும். இக்கட்டுரை கண்டதும் தமிழ் நாட்டில் பரமசிவனுக்கு கறி சமைத்துச் சாப்பிட எத்தனை பிள்ளைவேண்டுமானாலும் கொடுக்கத்தயார் என்று தமிழ்நாட்டு சைவவீரர்கள் முன்வந்து இதை மறுத்து கட்டுரை முன்வரினும் வருவர். என்னே நம்மக்களின் மதவெறி!

தஞ்சை ஜில்லா பாபநாசத்திற்கு அடுத்த சருக்கை கிராமத்தில் காலஞ்சென்ற முன்சீப் ரங்கமணி அய்யங்காரின் 28 வயதுள்ள புதல்வன் மணப்பாறைக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திலிருந்த 12 வயதுள்ள தன் மனைவியைப்பார்க்கச் சென்றிருந்தான், அப்பொழுது அவனுக்கு மோட்சப்பைத்தியமுண்டாயிற்றாம், அப்பொழுது அக்கிராம வாசிகளுக்கு 'கனகசபைத்திருநடனம்' கற்பித்தாராம். இறப்பதற்கு முந்தின நாள் அவர் [illegible]யாகம் என்னும் பெயரால் ஒருயாகம் செய்தாராம். ஒருபெரிய குழிவெட்டி விறகுகளை அடுக்கி தீ மூட்டி ராமநாமம் ஜபித்துக்கொண்டு யாககுண்டத்தைச்சுற்றி 'அவர் தாண்டவமாடினாராம். அப்பால் வீட்டிற்குச்சென்று மறுநாள் காலையாக குண்டத்தில் பாய்ந்து விட்டதாகச்சொல்லப்படுகிறது. இந்த சமாசாரம் கிராமத்தாருக்குத்தெரிய வந்ததும் அவர்கள் வந்து பார்த்தனர், அப்பொழுது அவர் உடல் பாதிக்குமேல் வெந்து கரிக்கட்டையாகக்கிடந்தது.

கடைசியில் போலீசார் வந்து மரணவிசாரணை நடத்தி பிரேதத்தை தகனம் செய்ய பந்துக்களிடம் கொடுத்தார்களாம் (சென்னை மெயில் 15-9-31)

மதவெறியாலுண்டான மோட்சப் பைத்தியம் 28 வயதுள்ள ஓர் இந்திய யுவனை தற்கொலை செய்யத்தூண்டிய துடனமையாது 12 வயதுள்ள அவனது மனைவியை தம் வாழ் நாள் முழுதும் விதவையாய் துயரக்கடலில் ஆழ்ந்து தவிக்கும்படி செய்து விட்டான். ஓர் சிறுமியின் வாழ் நாள் முழுவதையும் பாழாக்கிய ஹிந்து மதமே! நீயொழியும் நாள் என்னாளோ?

திருவாங்கூரிலுள்ள ஓர் பார்ப்பன பி. ஏ., பட்டதாரியொருவர் பிரம ஞான சபையைச்சேர்ந்தவர். இவ்வுலகம் துன்பம் நிறைந்தது எனவும் இவ்வுடல் பொய்யெனவும் நம் ஆன்மா பிரம்மத்தின் ஒருபாகமெனவும் நாம் மாய்கையாகிய இவ்வுடலினின்று பிரிந்தால் பிரம்மத்தோடு இரண்டரக்கலந்து விடலாமென்று எண்ணி திருவாங்கூர் பக்கத்திலுள்ள கடலில் சுமார் 4, 5 ஆண்டுகட்கு முன்னர் விழுந்து இறந்தது சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளில் வெளிவந்தது. வேதாந்தமதமே, பிரம்மஞானமே நீ மக்களுக்கு ஆற்றும் தொண்டே தொண்டு.

கோயமுத்தூர் ஜில்லாவிலும், மற்றும்பல இடங்களிலும், சில மத பக்தர்கள் சிறுவர்களைப்பிடித்துக்கொண்டு போய் பலியிட முயற்சித்தது மான பல சம்பவங்கள் பத்திரிகைகளில் அடிக்கடி வாசித்திருப்பீர்கள். எமது ஊரிலுள்ள ஒரு பையன்கூட 4, 5 ஆண்டிற்கு முன் இலங்கையிலிருந்து ஒரு சந்நியாசியால் ஏமாற்றப்பட்டு தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஓர் காட்டிற்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டு, அங்கு அம்மதவெறி கொண்ட மூடச்சந்நியாசி இச்சிறுவனைப் பலிகொடுக்கப்போவதற்கு முந்தினநாள் விடியற்காலம் தப்பியோடி வந்துவிட்டதற்கு அப்பையனே சாட்சியாக இன்றளவும் இருந்து வருகின்றான். போலிச்சந்நியாசிகளின் மதபக்தி—இல்லை—மதவெறியினால் மக்களுலகிற்கு உண்டாகும் கேடுகள் பலப்பல வென்றாலும் மக்களெவரும் அக்கேட்டையொழிக்க முன்வந்தார்களில்லை ஹா! இந்து மதங்களுக்கும் மதங்கொண்ட மக்களுக்கும் வெற்றிகாலமா?

இஸரவேலருக்கும், அம்மோனியருக்கும் போர்மூண்டபொழுது யெப்தா னென்பவன் நான் அம்மோனியரை வெற்றிகொண்டால் வெற்றியுடன் திரும்பி என் வீட்டுக்கு வரும் பொழுது எதிர்பட்டது எதுவோ அதை எனது கடவுளாகிய எகோவுக்கு தகனபலி கொடுப்பேன் என்று சங்கற்பம்பண்ணினான். அவ்வாறே அம்மோனியரோடு யுத்தம் செய்து அவர்களை சங்காரஞ்செய்து அவர்களின் பட்டினங்களையெல்லாம் பிடித்துக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் வெற்றிமுரசொலிப்ப தன் இல்லத்திற்கு திரும்பிவந்தான்.

அவ்வமயம் அவன் புதல்வி தன் தந்தையின் வெற்றிச்செய்திகேட்டு அகமகிழ்ந்து மிருதங்கத்தோடு நடனஞ்செய்து அவனை எதிர்கொண்டழைக்கவந்தாள். அவள் அவனுக்கு ஒரேபிள்ளை, வேறு புத்திரியோ, புத்திரனோ கிடையாது. அவளைக் கண்டதும் அவன் தன் பொருத்தனையைக்கூறி வருத்தப்பட்டு அவளை ஆண்டவனுக்குப்பலிகொடுக்க நேர்ந்ததற்கு வருந்தினான். அதற்கு அவள் ஆண்டவனுக்குக் கொடுத்த வாக்குப்படியே செய்யும்; அம்மோனியர் மேல் உமக்கு வெற்றிகிடைக்கச் செய்ததே போதுமென்றாள். பின்னும் தன் தந்தையை நோக்கி தந்தையே! நான் மலைகளின்மேல் உலாவித்திரிந்து என் தோழிகளுடனே என் கன்னிமையின் நிமித்தம் துக்கங்கொண்டாடும்படி எனக்கு இரண்டுமாதத்தவணை தரவேண்டுமென்றாள். அதற்கவன் நீ போய்வாவென்று அவளை இரண்டு மாதத்திற்கு அனுப்பிவிட்டான். அவள் தன் தோழிகளுடனே போய் தன்கன்னிமையினிமித்தம் மலைகளின்மேல் துக்கங்கொண்டாடி இரண்டுமாதம் முடிந்தபின் தன் தகப்பனிடம் திரும்பி வந்தாள். அப்பொழுது அவன் தான் பொருத்தனைபண்ணியிருந்தபடியே அவளை கடவுளுக்கு பலியிட்டான் என்பவைகள் கிறிஸ்துவேத புத்தகமாகிய பைபிளின் நியாதிபதி அத். 11. வசனம் 30—40ல் விரிவாய் கூறப்பட்டிருக்கிறது.

கன்றுக்குட்டியை பூசித்ததினிமித்தம் ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும், சிநேகிதனையும் கொன்று போடும்படி கர்த்தர் சொன்னதாய் மோசே சொல்ல, லேவியன் புத்திரர் 3000 பேரைக்கொன்றார்கள். (பைபிள்யாத்திராகமம் அதி 32 வசனம் 27, 28) இச்சங்காரத்தில் மோசேயின் சகோதரன் ஆரோன்மட்டும் கொல்லப்படவில்லை. பின்பு இவன் குருவாகவும் நியமிக்கப்பட்டான்.

ஒருசிறுவன் தேவதூஷணம் செய்ததற்காக கர்த்தர் அவனைக்கல்லால் எறிந்துகொல்லச்சொன்னார், அவ்வாறே கொன்றார்கள் (லேவியர் 24. 10, 16)

தாய்தந்தையர்கள் சொல்கேளாமலும், கீழ்ப்படியாமலுமிருக்கிற பிள்ளையை (ஷை தாய் தந்தையர்கள்) மூப்பரிடத்தில் கொண்டுபோய் இவன் பெருந்தீனிக்காரனும் குடியனுமாயிருக்கின்றான் என்று (இல்லாததைச்) சொல்லவேண்டும், எல்லாரும் அவனைக்கல்லால் எறிந்து கொல்லக்கடவர்கள்' (பைபிள் 2ஆகமம் 21. 18, 21)

"தண்டனாருயிர் முக்கட்
கடவுளை நிந்திப்போனைத்
தண்டனைபுரிந்து கொல்க
வரிதெனிற் சமிக்க நின்றி
மண்டனில் வலியனன்றேல்
வான்செவித்துணைகள்பொத்திக்
கண்டவன் அகன்று செல்க
குலகுலேந்தமல பத்தன்"

என்று சைவசமய நூல்களில் ஒன்றாகிய சித்தாந்த சிகாமணி என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது.

சைவசமய நாயன்மாரில் ஒருவராகிய திருஞானசம்பந்தர் வாதத்தில் தம்மிடம் தோல்வியுற்ற—இல்லை—ஏமாற்றப்பட்ட சமணர்களை நோக்கி நீங்கள் தோற்றால் நீங்கள் 8000 பேரும் கழுவேறவேண்டும் என்று யான் கூறிய பந்தயத்திற்கு இணங்கித்தோல்வியுற்று (ஏமாற்றப்பட்டு) போனீர்கள். அதன்படி நீங்கள் கழுவேறி இறக்கவேண்டியவர்களே. ஆனால் எங்களுக்கு நீங்கள் அடிமையாய் இருக்க சம்மதித்தால் கழுவிலேறி சாகவேண்டியதில்லையென்று கூற சிலர் மானம் பொறுக்கமாட்டாது கழுவிலேறியிறந்தார்கள். எஞ்சியவர்களை சைவர்கள் பிடித்து அந்த முத்தலைக் கழுமரத்திலேற்றியிருத்திக்கொண்டார்கள். கழுவிலேறியிறந்தவர்களையெல்லாம் பருந்து, காகம், கழுகு, நாய், நரிகள் முதலியவைகள் இழுத்து, இழுத்து தின்ன உடலானது கழுவில் கிடந்தது. என்பதைத்திருவிளையாடற்புராணம் இன்றும் கூறிக்கொண்டிருப்பதோடு, மதுரையில் நடை பெறும் கழுவேற்றிய திருவிழாவும் போதிய சான்றாய்விளங்குகின்றது. சைவர்காள்! உங்களின் ஜீவகாருண்யம் நன்று! நன்று!!

விஷ்ணுவே மேலான தெய்வமென்று தொழும் வைஷ்ணவரில் ஒரு பிறிவினரான தென்கலையாரின் பரமகுருவும் உபதேசரத்னமாலை, நூற்றந்தாதி முதலிய நூற்களின் ஆசிரியருமான மணவாளமாமுனி என்பவர் சைவசமயப்பண்டிதரான சிவலிக்கிரக யோகியாருடன் தஞ்சாவூர் சரபோஜி மஹாராஜாவின் முன்னர் சமயவாதஞ்செய்து தோல்வியுற்றார். அன்றிரவே மணவாளமாமுனி கோபங்கொண்டவராய் சிவாக்ரயோகியாரை யொழிப்பதே தம் சமயத்திற்கு செய்யும் அரும்பணியென எண்ணியோகியர் நித்திரை செய்துகொண்டிருக்கும் பொழுது நடுஇரவில் அவர் தூங்கும் வீட்டைக்தீக்கொழுத்திவிட்டார்" இச்சரித்திரத்தின் விரிவு பாவலர் சரித்திரதீபகம் என்னும் நூலில் நன்றாய் விளக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் ஆராய்ந்து கொண்டே போனால் சமயவெறியால் நடந்த கொலைகளும், போர்களும் அளவிட்டுரைக்க முடியா. இவைகளினால் மதபக்தி மிகுந்தவன் மதங்கொண்டவனாகின்றான் என்பது நன்கு புலனாகும். அப்பரும், சம்மந்தரும் கொலை புரிந்ததும், பெற்றோர் இரக்கமென்பதை அறவே துறந்து சீராளதேவரை கறிசமைத்ததும், அன்பு அணுவளவுமின்றி சண்டேசுர நாயனார் தம் தந்தையாரை வெட்டியதும் மணவாளமாமுனி சிவாக்ரயோகியாருக்கு செய்த கொடுமையும், இன்னும் நம் நாட்டில் நடைபெற்ற சைவ வைஷ்ணவ போர்களும் வடகலை தென்கலை சண்டைகளும் இது போழ்து நடைபெற்றுவரும் ஹிந்து முஸ்லீம் சச்சரவுகளும் ஐரோப்பாவில் நடைபெற்ற கத்தோலிக்—புரோட்டேஸ் டாண்டு யுத்தங்களும் மதங்களுக்கு விரோத

## மாகாண சட்டசபைகளில் ஸ்தானங்கள்.

### ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனி விபரம்.

மாகாணச் சட்டசபைகளில் (கீழ் சபைகளில்) பின்வருமாறு ஸ்தானங்கள் நிர்ணயம் செய்யப் பெற்றிருக்கின்றன:—

சென்னை;—பொது ஸ்தானங்கள் 134 (6 பெண்கள் உட்பட) ஒடுக்கப்பட்டவர்கள் 18; பிற்போக்கான பிரதேசங்களின் பிரதிநிதி 1; முஸ்லீம்கள் 29; (ஒரு பெண் உட்பட) இந்தியக்கிறிஸ்தவர்கள் 9; (ஒரு ஸ்திரீ உட்பட) ஆங்கிலோ இந்தியர்கள் 2; ஐரோப்பியர்கள் 3; வியாபாரம், சுரங்கம் தோட்டம் 6; நிலச் சுவான் தார்கள் (ஜமீன் தார்கள்) 6; சர்வகலாசாலை 1; தொழிலாளர் 5; மொத்தம் 215.

பம்பாய்:— (ஸிந்து உட்பட) பொதுத் தொகுதிகள் (ஐந்து பெண்கள் உட்பட) 97. பிற்போக்கான பிரதேசம் 1; முஸ்லிம்கள் (ஒரு பெண் உட்பட) 63; இந்தியக் கிறிஸ்துவர்கள் 3; ஆங்கிலோ இந்தியர்கள் 2; ஐரோப்பியர் 4; வியாபாரம் முதலியன 8; நிலச்சுவான்தார்கள் 3; சர்வகலாசாலை 1; தொழிலாளர் 8; மொத்தம் 200.

வங்காளம்:—போதுத் தொகுதிகள் (இரண்டுபெண்கள் உட்பட) 80; தாழ்ந்த வகுப்பினர் பூஜ்யம்; முஸ்லிம்கள் (இரண்டு பெண்கள் உட்பட) 119; இந்தியக்கிறிஸ்துவர்கள் 2; ஆங்கிலே இந்தியர் (ஒருபெண் உட்பட) 4; ஐரோப்பியர் 11. வியாபாரம் 19; நிலச்சுவான்தார்கள் 5; சர்வகலாசாலை 2; தொழிலாளர் 8; மொத்தம் 250,

ஐக்கிய மண்டலம்:— பொதுத் தொகுதிகள் (4 பெண்கள் உட்பட) 132; தாழ்ந்த வகுப்பினர் 12; முஸ்லிம்கள் (இரண்டு பெண்கள் உட்பட) 66; இந்தியக்கிறிஸ்துவர்கள் 2: ஆங்கிலோ-இந்தியர் 1; ஐரோப்பியர் 2; வியாபாரம் 3; நிலச்சுவான்தார்கள் 6; சர்வ கலாசாலை 1; தொழிலாளர் 3; மொத்தம் 228.

பாஞ்சாலம்:—பொதுத் தொகுதிகள் (ஒரு பெண் உட்பட) 43; சீக்கியர் (ஒரு பெண் உட்பட) 32; முஸ்லிம்கள் (இரண்டு பெண்கள் உட்பட) 36; இந்தியக் கிறிஸ்துவர்கள் 2; ஆங்கிலோ-இந்தியர் 1; ஐரோப்பியர் 1; வியாபாரம் 1; நிலச்சுவான்தார்கள் 5; சர்வ கலாசாலை 1; தொழிலாளர் 3; மொத்தம் 175.

பீஹார் ஒரிஸ்ஸா;—பொதுத் தொகுதிகள் (3 பெண்கள் உட்பட) 99; தாழ்ந்தவகுப்பினர் 7; பிற்போக்கான பிரதேசங்களின் பிரதிநிதிகள் 8; முஸ்லிம்கள் (ஒரு பெண் உட்பட) 42; இந்தியக்கிறிஸ்துவர்கள் 2; ஆங்கிலோ இந்தியர் 1; ஐரோப்பியர் 2; வியாபாரம் 4; நிலசசுவான்தார்கள் 5; சர்வகலாசாலை 1; தொழிலாளர் 4; மொத்தம் 175.

மத்திய மண்டலம்:—பொதுத் தொகுதிகள் (3 பெண்கள் உட்பட) 77; தாழ்ந்தவகுப்பினர் 10; பிற்போக்கான பிரதேசங்களின் பிரதிநிதி 1; முஸ்லிம்கள் 14; ஆங்கிலோ இந்தியர் 1; ஐரோப்பியர் 1; வியாபாரம் 2; நிலச்சுவான்தார்கள் 3; சர்வகலாசாலை 1; தொழிலாளர் 2; மொத்தம் 112.

அஸ்ஸாம்:—பொதுத் தொகுதி (ஒரு பெண் உட்பட) 44; தாழ்ந்த வகுப்பினர் 4; பிற்போக்கான பிரதேசங்களின் பிரதிநிதிகள் 9: முஸ்லிம்கள் 34; இந்தியக்கிறிஸ்துவர்கள் 1; ஐரோப்பியர்கள் 1; வியாபாரம் 11; தொழிலாளர் 4; மொத்தம் 108

எல்லைப்புற மாகாணங்கள்:— பொதுத்தொகுதிகள் 9; சீக்கியர் 3; முஸ்லிம்கள் 36; நிலச்சுவான்தார்கள் 2; மொத்தம் 50

ஸிந்து அல்லாத பம்பாய்க்கும் ஸிந்து பிரதேசத்திற்கும் ஸ்தானங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன:— ஸிந்து நீங்கலாக பம்பாய்மட்டும் பொதுத்தொகுதிகள் (5 பெண்கள் உட்பட) 109; தாழ்ந்த வகுப்பினர் 10; பிற்போக்கான பிரதேசங்களின் பிரதிநிதி 1; முஸ்லிம்கள் (ஒரு பெண் உட்பட) 30; இந்தியக்கிறிஸ்துவர்கள் 3; ஆங்கிலோ இந்தியர் 2; ஐரோப்பியர் 3; வியாபாரம் 7; நிலச்சுவான்தார்கள் 2; சர்வகலாசாலை 1; தொழிலாளர் 7; மொத்தம் 175.

ஸிந்து:—பொதுத் தொகுதிகள் (ஒரு பெண் உட்பட) 19; முஸ்லிம்கள் (ஒரு பெண் உட்பட) 34; ஐரோப்பியர் 2; வியாபாரம் 2; நிலச்சுவான்தார்கள் 2; தொழிலாளர் 1; மொத்தம் 60.

---

மாய் எழுதியும் பேசியும் வந்த பிளேட்டோ (Plato) என்னும் தத்துவ சாஸ்திரியும் சமதர்ம இயக்கஸ்தருமான அறிஞரின் கொள்கையை பிரசாரம்பண்ணிய ஹைபேசியா (Hypatia) என்னும் பெண் மணியின் தோலுரித்து, அம்மாதை நிர்வாணமாக்கிதெருவிலிழுத்து தடியாலடித்துக் கொன்றதும் புரூனோ (Burno) என்னும் அத்துவித சாஸ்திரியை நெருப்பிலிட்டுக்கொன்றதும், வானினி (Vanini) என்னும் இத்தாலியா தத்துவஞானியின் நாக்கு அறுக்கப்பட்டதும், முஸ்லீம் மேதாவிகளான சீர்திருத்த வாதிகள் பலர் அம்மதஸ்தர்களாலே தோலுரிக்கப்பட்டதும், கல்லாலடிக்கப்படிறந்தும், கோடிக்கணக்கான மக்கள் சமயப் பேரால் மாண்டதும், மாண்டுவருவதும் மதவெறியன்றென எவரே மறுக்க வல்லார், இது பற்றியன்றோ மேனாட்டறிஞர்கள் பலர் மதத்தை ஒழிக்க வேண்டுமென்று கூறிவருகிறார்கள். மதத்தையொழித்துருஷியா தேசமெங்கும் சமாதானமும் சந்தோஷமும் பொங்கி ஒற்று வளர்ந்து வருகிறது. இதன் உண்மையை அறிந்தே நமது இயக்கத் தோழரும் ஏழைகளின் நண்பருமான திரு. எஸ். ராமநாதன் அவர்கள்,

மதமென்று மனிதசமூகத்தில் அறிவும் அன்பும் உதயமாகாமல் மிருகத்தன்மை ஓங்கியிருந்தகாலத்தில் தந்திரசாலிகளான ஒருசிறுகூட்டத்தார் பெருவாரியான மக்களை அடிமையாள ஏற்படுத்திய ஒரு சூழ்ச்சியாதம். அம்மதமே மக்களிடத்தில் மிருகசுபாபத்தையும் மூடநம்பிக்கையையும் வளர்த்து வரும் ஒருஸ்தாபனமாய் விளங்குகிறது. அதையொழிக்க முயற்சிக்க வேண்டியது ஒவ்வொரு சமதர்மவாதியின் கடமையாதும், என்று கூறியுள்ளார்;

(தொடரும்)

---

## வகுப்புப் பிரச்சினை முடிவு.

### வங்காமுஸ்லீம்கள் அறிக்கை

சுமார் 30 பேருக்கு மேற்பட்ட வங்காள முஸ்லீம் பிரமுகர்களும், தலைவர்களும் கையெழுத்திட்டு கீழ்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

"எதிர்பார்த்த சமூகத்தீர்ப்பு வெளியாகி விட்டது. அவற்றின் நுணுக்க ஆராய்ச்சியின் முடிவை இப்போது ஒன்றும் கூறுவதற்கில்லை. வங்க முஸ்லீம்களைப் பொருத்தமட்டில் அது திருப்தியும் அதிருப்தியும் கலந்ததாயே இருக்கிறது. தற்போதைய நிலைமைக்கு அது முற்போக்குள்ளதாய் காணப்பட்டாலும், வங்க முஸ்லீம்களின் அதிக பிரதிநிதித்துவ "காரிக்கை அங்கீகரிக்கப்படாமை வருந்தத்தக்கதே.

இருந்தபோதிலும், இப்போதைய சங்கடமும் சிக்கலுமான நிலையையறிந்திருக்கிறோம். ஆகையால் சமூகங்கள் குற்றங்கண்டு பிடிப்பதிலும் சமாதானம் செய்வதிலும் காலத்தைப் போக்குவதைவிட, வரப்போகிற சீர்திருத்தத்திற்கு சர்க்காருக்கு உதவி செய்ய முனைவதே சிலாக்கியமாகும்.

## டாக்டர் ரவீந்தரநாத்.

இன்னும் சொல்ப காலத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும்புதிய சீர்திருத்தங்களைப்பற்றி தங்கள் முழு கவனத்தையும் செலுத்தவேண்டும். வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பு நம் கையில் தானிருக்கிறது. நிஷ்காரணமான வகுப்பு வேற்றுமைகளையும், ஜாதி வித்தியாசங்களையும் அறிவாளிகள் தற்சமயம் கண்டித்து வருவதை அநுகூலமாகக் கொண்டு, நமக்குள்ளேயே ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள நாம் முயலவேண்டும். தேச முன்னேற்றத்துக்கு சாஸ்வதமாகவுள்ள ஒரு பெருந்தடையை நாம் நீக்க முயலவேண்டும்.

## சர். அப்துல் ரஹீம்.

இந்திய அரசியல் வாதிகள் வகுப்புப் பிரச்சினைபற்றிதங்களுக்குள்ளேயே ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாமற் போனதாலும் நம் வட்டமேஜை மகாநாட்டு அங்கத்தினர்களும் ஆலோசனைக்கமிட்டி அங்கத்தினர்களும் இதைத்தீர்த்து வைக்கும்படி பிரிட்டிஷ் சர்க்காரை கொண்டிருந்த படியாலும் இத்தீர்ப்பு பற்றி வீண்வயிற்றெரிச்சல் படுவதில் பயனில்லை. மொத்தத்தில்தீர்ப்பு முஸ்லீம்களுக்கு பாதகமாகத் தானிருக்கின்றன ஆனால் தற்போதைய நிலையில் நாம் எவ்வகையான சுயாட்சியை அடைய வேண்டுமானாலும் இதைத்தவிர்க்கவே முடியாதென்பதை உணரவேண்டும். இருந்தபோதிலும் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சீக்கியர்களும் சமபாக நன்மைகளடையக்கூடியவகையில் தேசத்தை முன்னேற்ற நிலைக்குக் கொண்டு வரக்கூடிய ஓர் பெரிய திட்டத்தை ஏற்படுத்தும் வல்லமைவாய்ந்த அரசியல் தலைவர்கள் இன்னும் சில காலத்தில் இந்தியாவில் தோன்றுவரென்றும் வகுப்புப் சச்சரவுகள் நாட்டிலுருந்து அடியோடு தொலைந்து விடுமென்றும் நான் நம்பிக்கொண்டிருக்கிறேன்.

## சர். எம். விஸ்வேசராயா கருத்து.

பெங்களூர், ஆகஸ்டு 22 சர். எம். விஸ்வேஸ்வரையா அவர்கள் வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பைப்பற்றி பின் கண்டவாறு அபிப்பிராயமளித்துள்ளார்:—சமீபத்தில் பிரதம மந்திரியினால் வெளியிடப்பட்ட வகுப்புப் பிரச்னைத்தீர்ப்பை ஒவ்வொரு எழுத்தாக கூர்ந்து ஆராய்ச்சிசெய்வது அழகல்ல. இந்தியத் தலைவர்களுக்குள்ளே ஓர் விதமான ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சிலவிஷயங்களில், காங்கிரஸ் காரர்களுடனும் ஒப்பந்தஞ் செய்துக்கொள்ள வேண்டும். ஐக்கியச் சட்டசபைகள் அமைக்கும் பொழுதே, இந்த வகுப்புப்பிரச்சினைத் தீர்ப்பின் நன்மை வெளியாகும்.

## ஆதிதிராவிட வாலிபர் சங்கம், குளூர்.

இச்சங்கத்தின் கூட்டம் 20-8-32ந் தேதி 5—30 மணிக்கு தோழர் எஸ். எல். எஸ். மணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் பல அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். பின் சங்கத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டது. பின் சில தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது

(ஒரு நிருபர்.)

## சென்னைக்கு ஏஜண்டு தேவை.

நமது "குடி அரசு" பத்திரிகையை விற்பனை செய்ய தகுந்த டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் சென்னைக்கும், மதுரைக்கும் தேவை. இது சமயம் டி நகரங்களில் 150 பிரதிகளுக்கு மேல் செலவாகிவருகிறது. கமிஷன் 100க்கு 25. மற்ற விபரம் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்.



# குடி அரசு.

ஈரோடு 1932 ஆகஸ்டுமீ 28-உ


## குற்றஞ்சொல்ல வாய் உண்டா?

:0:

(வகுப்புப்பிரச்சினைமுடிவு)

இனி வரப்போகும் மாகாண சுயாட்சி அமைப்பில், ஒவ்வொரு மாகாண சட்டசபைகளிலும், ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனித்தனியே எத்தனை ஸ்தானங்கள் இருக்கவேண்டும் என்னும் வகுப்புப் பிரச்சினை சம்பந்தமான முடிவு சென்ற 16—8—32ல் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டு விட்டது. இந்த வகுப்புப்பிரச்சினை சம்பந்தமாக, பல சமூகங்களும் ஒப்புக்கொள்ளும்படியான ஒரு முடிவு காண, திரு. காந்தியுள்பட வட்டமேஜை மகாநாட்டுப் பிரதிநிதிகள், இந்தியாவிலும், இங்கிலாந்திற்குச்செல்லும் வழியில் கப்பலிலும், இங்கிலாந்திலும் எவ்வளவோ முயன்றும் முடியாமற் போய் விட்டது. இவர்களால் முடியாமல் போன காரணத்தாலேயே இப்பொழுது பிரிட்டிஷ் பிரதம மந்திரியால் தீர்மானிக்கப்பட்ட முடிவை இந்திய அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கின்றார்கள்.

இப்பொழுது அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் தீர்ப்பின்படி முஸ்லிம்கள், சீக்கியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் ஐரோப்பியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், முதலியவர்களுக்குத் தனித்தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையளிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் பெண்கள், தொழிலாளர், நிலச்சுவான்தாரர்கள், வியாபாரிகள், சர்வகலாசாலைகள், முதலிய பலருக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

இத்தீர்ப்பில் முக்கியமாகக்கவனிக்கக்கூடியனசிலஉள்ளன. முஸ்லிம்கள் பஞ்சாப் மாகாணத்திலும், வங்காள மாகாணத்திலும், தாங்கள் பெரும்பான்மையினராயிருப்பதால், தங்களுக்கு அதிக ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கவேண்டும் என்றும், மற்ற மாகாணங்களில் தங்கள் ஜனத்தொகைக்குத் தக்கவாறு ஸ்தானங்கள் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டனர். ஏறக்குறைய அவர்கள் கேட்டவாறே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இத்தீர்ப்பைக்கொண்டு முஸ்லிம்கள் திருப்தியடைவது தான் நியாயமே தவிர, தங்களுக்கு அரசாங்கத்தார் காட்டியிருக்கும் சலுகை போதாதென்று குறைகூறுவது ஒழுங்காகாதென்றே நாம் கருதுகின்றோம்.

அடுத்தபடியாக தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதியும், பொதுத்தொகுதியில் ஓட்டுக்கொடுக்கும் உரிமையும் அளித்திருப்பது பாராட்டத்தகுந்ததாகும். இதனால் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்குச் சட்டசபையின் மூலம் அவர்கள் விரும்பும் நன்மைகள் கிடைக்க இடமுண்டு. எப்படியெனில், பொதுத்தொகுதியின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் வாக்குகளையும் பெற்றே சட்டசபைக்குச் செல்லவேண்டியிருப்பதால், அப்பிரதிநிதிகள், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் அவர்கள் சமூக முன்னேற்றத்தின் பொருட்டு கொண்டுவரும் தீர்மானங்களுக்கு ஆதரவளித்தே தீரவேண்டும்; இன்றேல் அடுத்த தேர்தலில் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் வாக்குகளைப் பெற முடியாமல் போய் விடுவார்கள்.

அடுத்தபடியாகப் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் ஸ்தானங்கள் மிகவும் குறைவாகும். ஜனத்தொகையில் பாதிக்குமேலுள்ள பெண் சமூகத்திற்கு மிகக்குறைந்த ஸ்தானங்கள் அளித்திருப்பது, அச்சமூகத்தை இழிவு படுத்துவதாகுமென்பதே நமது அபிப்பிராயமாகும். ஆனால் அவர்களுக்குள்ளும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கியிருப்பதுபோற்றத்தக்கதாகும். இவ்வாறுபெண்களுக்குள்ளும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கியிருப்பதைப் பலர் கண்டிக்கிறார்கள். தற்பொழுதுள்ள நிலையில் பெண்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால், சட்டசபைகளுக்குப் பொதுத்தொகுதியின் மூலம் தேர்ந்தெடுக்கும் எல்லாப் பெண்களும் அனேகமாக இந்துப்பெண்களாகவே இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. மற்றய வகுப்புப் பெண்கள் ஸ்தானம் பெறுவதற்கு முடியாமல் போய்விடும். ஆகையால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளித்திருப்பதன் மூலம் எல்லா வகுப்புப் பெண்களுக்கும் ஸ்தானம் கிடைக்கும்படி செய்திருப்பதை நாம் பாராட்டவேண்டுமேதவிர, குறை கூறுவது தவறாகும்.

அடுத்தபடியாகத் தொழிலாளர்களுக்கு அளித்திருக்கும் ஸ்தானங்களும் மிகமிகக் குறைவானதாகும். தொழிலாளர்கள் இல்லாவிட்டால், நாட்டில் விவசாயமோ, கைத்தொழில்களோ, வியாபாரமோ, பணக்காரர்களோ, அரசாங்கமோ ஒன்றும் நிலைத்திருக்க முடியாது என்பது அறிஞர்கள் கண்ட உண்மையாகும். நாட்டின் செல்வத்தை வளர்க்கின்றவர்கள், நாட்டைப்பாதுகாத்து வருபவர்கள் தொழிலாளர்களே யாவார்கள். ஆகவே நியாயப்படி பார்த்தால் அவர்களுக்கே அரசாங்கத்திலும் சட்டசபையிலும் அதிக ஆதிக்கமிருக்கவேண்டியது ஒழுங்காகும். இப்படியில்லாமல் அவர்களை நசுக்கும் மனப்பான்மையுடையவர்களுக்குஅதிக ஆதிக்கமும், அவர்களுக்கு பேருக்கு மாத்திரம் சில ஸ்தானங்களும் ஒதுக்கி வைத்திருப்பது திருப்தியற்ற செயலாகுமென்றுதான் நாம் கூறுவோம்.

ஆயினும், பிரதமமந்திரியவர்கள் வருணாச்சிரம தரும அரசியல் வாதிகளின் பயமுறுத்தல்களையும், முட்டுக்கட்டைகளையும் சிறிதும் லட்சியம் பண்ணாமல், தாழ்த்தப்பட்டோர், முஸ்லிம்கள், சிறுபான்மைச்சமூகத்தினர்கள் முதலியவர்கள் விரும்பிய படியே அவர்களுக்குத் தனித்தொகுதியும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும் அளித்து வெளியிட்டிருக்கும். இத்தீர்ப்பை நாம் வரவேற்கின்றோம்.

இது சட்டமாகும் போது, இந்தத்தீர்ப்பில் கண்டுள்ள தேர்தல் ஏற்பாட்டையும் மற்றும் பல ஏற்பாடுகளையும் 10 வருஷ காலத்திற்குப் பிறகு, இதில் சம்பந்தப்பட்ட சமூகத்தினரின் சம்மதத்தின் பேரில் மாற்றுவதற்கு இடமிருக்கவும், மாற்றப்படாவிட்டால் 20 வருஷங்களுக்குப் பின் இந்த விசேஷ ஏற்பாடுகள் தாமே முடிந்து விடுவதாகவும்சட்டத்திலேயே விதித்துவிட வேண்டுமென்பது அரசாங்கத்தாரின் உத்தேசமெனக் கூறப்பட்டிருக்கின்றதும் கவனிக்கத்தக்கதாகும்.

இந்த விதமான வகுப்புப்பிரச்சினைத் தீர்ப்பு வெளியானவுடன், நமது நாட்டில் உள்ள சில நியாய புத்தியுள்ள அரசியல் வாதிகளைத் தவிர பாக்கியுள்ள அதிதீவிர ஆவேச அரசியல் வாதிகளும், இந்து மகாசபைக்காரர்களும், வருணாச்சிரம தருமிகளும், அரசியல் வயிற்றுப்பிழைப்புக்காரர்களும், தேசியப்பல்லவி பாடும்பத்திரிகை ஆசிரியர்களும் ஒரேயடியாக இதைக்கண்டிக்கத்தொடங்கிவிட்டார்கள். "இந்திய அரசியலில் வகுப்புவாத விஷத்தைப் பிரதம மந்திரி புகுத்தி விட்டார்" என்று வகுப்புவாத விஷத்திலேயே ஊறிப்போய்க்கிடக்கும் இவர்கள் கூச்சலிடுகிறார்கள். ஆனால் இவர்கள் இவ்வாறு புலம்புவதில் ஏதாவது அர்த்தமுண்டா என்றுதான் நாம் கேட்கின்றோம்.

வட்டமேஜை மகாநாடு ஆரம்பமானது முதல் இந்த வகுப்புப்பிரச்சினை விஷயம் முதன்மையானதாக இருந்துகொண்டிருந்தது யாருக்கும் தெரியாததல்ல. பிரிட்டிஷ் அரசாங்கமும், பிரதம மந்திரியும் "நீங்களே இவ்விஷயத்தை முடிவு செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லி இந்தியப் பிரதிநிதிகளிடமே ஒப்படைத்துவிட்டு, ஆரம்ப முதல் கடைசிவரையிலும் இதில் தலையிடாமலே இருந்து விட்டார்கள். இந்தியப் பிரதிநிதிகளும் கூடிக்கூடிப் பேசிப்பேசிப்பார்த்தார்கள்; திரு. காந்தியவர்களும், வகுப்புப்பிரச்சினை தீர்ந்தால்தான் வட்டமேஜை மகாநாட்டுக்குப் போவேன் என்றுசொல்லிப்பார்த்தார்; இங்கிலாந்திலும் என்னென்னமோ செய்து பார்த்தார், கடைசியில் ஒன்றும் முடியாமல்போய் விட்டது. வட்டமேஜை மகாநாட்டு முஸ்லிம் பிரதிநிதிகளோ வகுப்புப்பிரச்சினை சம்பந்தமாகச் சமரசமான முடிவு ஏற்பட்டால் தான் தாங்கள் மகாநாட்டுடன் கலந்து உழைக்க முடியும்; இன்றேல் கலந்து உழைக்க முடியாது என்று கூறிஒதுங்கிவிட்டார்கள். இக்காரணத்தால் மேலே நடத்த வேண்டிய அரசியல்வேலை தடைப்பட்டு விட்டது என்னும் விஷயங்கள் இந்தத்தேசியக் கூச்சல்காரர்கள் அறியாததல்லவே.

ஆகவே இவர்களால் முடிவு செய்ய முடியாமல் கைவிடப்பட்ட ஒரு விஷயத்தையே பிரதம மந்திரி முடிவு செய்திருக்கும்போது, அது சரியாயிருந்தாலும், தப்பாயிருந்தாலும் அதைப்பற்றிப்பேச இவர்களுக்கு வாயுண்டா என்றுதான் நாம் கேட்கின்றோம்.

அன்றியும், இவ்விஷயத்தை முடிவு செய்யக்கூடிய யோக்கியதையாவது இந்த தேசியக் கூச்சல்காரர்களுக்கு இருக்கிறதா என்று கொஞ்சம் ஆலோசனை செய்து பாருங்கள்! முஸ்லிம்களும், தாழ்த்தப்பட்டவர்களும், மற்ற சிறுபான்மையினரும் தங்களுக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும், தனித்தொகுதியும்தான் வேண்டுமென்று பிடிவாதம் செய்தனர்; காங்கிரசின் சார்பாகத் திரு. காந்தியவர்கள், முஸ்லிம்களுக்கும் சீக்கியர்களுக்கும் மாத்திரம் தனித்தொகுதியும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும் கொடுக்கச் சம்மதிக்கிறேன்; மற்றச் சிறுபான்மை வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் ஒருக்காலும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும், தனித்தொகுதியும் கொடுக்கச் சம்மதிக்கமாட்டேன் என்றார்; மற்றும் ஒரு வருணாச்சிரம தரும இந்துக்கூட்டம், இந்திய அரசியலில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமோ, தனித்தொகுதியோ எதுவும் இருத்தல்கூடாது; எல்லாம் பொதுப்பிரதிநிதித்துவமாகவும், பொதுத்தொகுதியாகவுமே இருக்கவேண்டும்; என்று கூறிக்கொண்டிருந்தது. இந்த வகையாக மூன்றுவித அபிப்பிராயங்களைப் பிடிவாதமாக உடைய பிரதிநிதிகள் எவ்வாறு ஒன்றுகூடி ஒரு ஏகோபித்த முடிவுக்கு வரமுடியும் என்றுதான் கேட்கிறோம். ஆகவே இத்தகைய கூட்டத்திற்கு ஒரு முடிவைக்காட்டுவதற்கு, இவர்களல்லாத வேறொருவர் தானே வந்து தீரவேண்டும்; வேறொருவரால் தானே ஏதேனும் ஒரு வகையான முடிவையும் ஏற்படுத்த முடியும்? என்பது உண்மையா அல்லவா என்றுயோசனை செய்து பாருங்கள்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித்தொகுதியும் தேசிய அபிவிருத்திக்கு இடையூறு விளைவிக்கக்கூடியது, இவைகளால், எக்காலத்திலும் தேசம் ஒன்றுபட முடியாது, வகுப்புத்துவேஷமும் கலகமும் இன்னும் அதிகப்பட்டு, அவை எப்பொழுதும் அழியாமல் நிலைத்து நிற்கவே இடமேற்படும் என்றெல்லாம் கூறி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும், தனித்தொகுதியையும் நமது நாட்டில் அரசியல் கிளர்ச்சி ஆரம்பமான நாள் முதல் இன்றுவரையிலும் ஒரு கூட்டத்தார் கண்டித்து வருகின்றார்கள். இவர்கள் கண்டிப்பது சரியானதாகவும், நமது நாட்டின் நிலைமைக்குப் பொருத்தமானதாகவும், தேசத்துக்கு நன்மையளிக்கக் கூடியதாகவும் இருக்கிறதா என்பதைச் சிறிது கவனிப்போம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும், தனித்தொகுதி தேர்தல் முறையையும் கண்டிக்கின்ற இக்கூட்டத்தாரோவென்றால், தாம்தான் அரசியல் சுதந்திரங்களையெல்லாம், அனுபவிக்க உரிமையுடையவர்களென்றும், தமக்கே பரம்பரையாக அதிகாரம் செலுத்தும் உரிமை "கடவுள்" என்பவராலேயே கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், மற்ற சமூகத்தார்கள் —அதிலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தார்கள் எப்பொழுதும் சுதந்திரமில்லாமல் அடிமைகளாக இருந்து உழைத்துக் கஷ்டப்படுவதற்கே உரியவர்களென்றும், அவர்களை எந்தவகையிலும் முன்னேற வொட்டாமல் பரம்பரையாக அவர்கள் அநுபவித்து வந்த கொடுமைகளையே அனுபவிக்கச் செய்வதுதான் தமது கடமையென்றும் நம்பிக்கொண்டும், இவ்வாறே செய்துகொண்டும் இருக்கின்றவர்கள் என்பது அறிவுள்ள மக்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயமேயாகும்.

ஆனால், பெரும்பாலோராக இருக்கின்ற மேற்கூறிய கூட்டத்தாரால், நசுக்கப்பட்டும், வெறுக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் கிடக்கும், செல்வமும் செல்வாக்கும் அற்ற கூட்டத்தார், ஜனசமூகத்தில் மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை அரசியல் மூலம் நீக்கிக்கொண்டு முன்னேற்றமடையும் பொருட்டு, வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும், தனித்தொகுதியும் இருந்தாலொழிய சட்டசபைகளில் தாங்கள் ஸ்தானம் பெற்று தமது காரியங்களைச்சாதித்துக்கொள்ள முடியாது என்று அறிந்து, தங்களுக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமே வேண்டுமென்று கேட்டு வந்தனர் என்பதும் அறிவுள்ளவர்கள் அறியாததல்ல.

இவ்விரு சார்பார்களின்கோரிக்கைகளில் உண்மையில் அனுதாபத்திற்குரிய கோரிக்கை பிற்கூறிய ஒடுக்கப்பட்ட சிறுபான்மையோருடைய கோரிக்கையேயாகும் என்பதை அறிவுடையவனாவது மறுக்க முடியுமா? இந்த அனுதாபத்திற்குரிய கோரிக்கையையுடைய மக்களையும் கவனிக்காமல் உயர்ந்த—அறிவுடைய—செல்வமுடைய—ஜாதி ஆணவமும், அதிகாரச் செருக்கும் உடைய கூட்டத்தார் கோரிக்கையாகிய பொதுப்பிரதிநிதித்துவமும், பொதுத்தேர்தலும் உள்ள அரசியல் அமைப்பை அளித்தால், இதன் மூலம் திக்கற்ற—தாழ்த்தப்பட்ட—சிறுபான்மைச் சமூகத்தாரை என்றென்றும் தலை தூக்க முடியாதபடி பாதகஞ் செய்ததாகாதா? என்னும் விஷயத்தை நன்றாய் யோசனை செய்து பார்க்கும்படி வேண்டுகின்றோம். இச்சமயத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், தனித்தொகுதி தேர்தல் முறை சம்பந்தமாகவுள்ள நமது அபிப்பிராயத்தை முன்பு பல தடவைகளில் வெளியிட்டிருந்தாலும் இப்பொழுதும் அதைப்பற்றிச் சிறிது கூறி விடுகின்றோம்.

நாமும், மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் பிரதிநிதித்துவம் பெற்று அவைகளின்மூலம் நடைபெறும் அரசியலினால், நாட்டில் சமதர்மம் உண்டாக்க முடியாது; மதங்களின் பாதுகாப்புக்காகவும், தனித்தனி ஜாதிகளின் பாதுகாப்புக்காகவும் அரசியல் உரிமை பெறுகிறோம் என்று இல்லாமல் நாட்டு மக்களின் பாதுகாப்புக்காகவே அரசியல் உரிமை பெறுகிறோம் என்றும் எல்லாருடைய பிரதிநிதிகளைக்கொண்டு நடைபெறும் அரசாங்கத்தின் மூலமே தேசத்தில் சமதருமம் தோன்றமுடியும்; மக்கள் சுகமடைய முடியும் என்றும் உறுதியான நம்பிக்கையுடையோம்.

ஆனால் இத்தகைய சமதர்ம நோக்கம் சட்டசபைகளிலும், அரசியல் அதிகாரங்களிலும் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளிடம் உண்டாகவேண்டுமானால் முதலில் மதங்களும், ஜாதிகளும் அழிந்து தீரவேண்டும். மதங்களும், ஜாதிகளும் அழியவேண்டுமானால் முதலில் ஒரு மதத்தினரை ஒரு மதத்தினர் தாழ்வாக மதிப்பதும், துன்பப்படுத்துவதும், ஒருஜாதியினரை ஒருஜாதியினர் கொடுமைப்படுத்துவதும், அடிமைப்படுத்துவதும், அடக்கியாளுவதும் ஆகிய தற்போது நிகழும் காரியங்கள் அடியோடு அழியவேண்டும்; ஒரு மதத்தினருக்கு ஒருமதத்தினர் ஒரு ஜாதியினர்க்கு ஒரு ஜாதியினர்; எந்த வகையிலும் குறையாத அதிகாரம் படைத்தவராயும், கல்வியறிவு பெற்றவராகவும், செல்வம் பெற்றவராகவும், சுதந்திரம் பெற்றவராகவும், ஆகிவிட்டால் மதக்கொடுமைகளும், ஜாதிக்கொடுமைகளும் மாண்டொழிந்துபோகும்: மதக்கொடுமைகளும், ஜாதிக்கொடுமைகளும் மாண்டொழிந்தால் மதங்களும், ஜாதிகளும் தாமே மாண்டொழியும். மதங்களும் ஜாதிகளும் கொடுமைகளான காரியங்களைச்செய்து கொண்டிருப்பதன்மூலமே நிலைத்து நிற்கின்றன என்னும் உண்மையை அறிந்தவர்களுக்கு இதுவிளங்காமற்போகாது.

ஆகவே இவ்வாறு ஆவதற்கு எல்லாமதத்தினரும், எல்லா வகுப்பினரும் அரசியலில் சமபாகு பெற்றாகவேண்டியது அவசியம்; அரசியலில் சமபங்கு பெறாவிட்டால் ஒரு ஜாதியினருக்கு ஒரு ஜாதியினர், ஒருமதத்தினருக்கு ஒரு மதத்தினர், இழைத்துவரும் கொடுமைகளை எந்தவகையிலும் நீக்கிக்கொள்ள முடியாது. இவ்வாறு எல்லா வகுப்பினரும், மதத்தினரும் அரசியலில் பிரதிநிதித்துவம் பெறுவதற்குத் தற்காலநிலைமையில் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும், தனித்தொகுதி தேர்தல் முறையும் இல்லாவிட்டால் முடியவே முடியாது என்பது நீண்டகாலமாய நமது உறுதியான அபிப்பிராயமாகும்; ஆகையால் நாம் ஆதிமுதல் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தையும் தனித்தொகுதித்தேர்தல் முறையையும் ஆதரித்து வருகின்றோம்.

ஆகவே தற்காலத்தில் நமது நாடுள்ள சிக்கலான நிலையில், எல்லா வகுப்பினரும், எல்லாமதத்தினரும், அரசியலில் சிறிது அதிகாரம் பெறும்படியான ஒரு ஏற்பாட்டைச்செய்ய வேண்டுமானால், தற்பொழுது பிரதமமந்திரியால் செய்யப்பட்டிருக்கும் முடிவைத்தவிர வேறு விதமான ஒரு முடிவையும் செய்யமுடியாது; செய்வதற்கும் வழியில்லை; என்பதே நமது கருத்தாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தேசமக்களுக்குக் கடுகளவாவது நன்மை செய்யவேண்டும் என்னும் அரசியல் வாதிகள் இம்முடிவை ஒப்புக்கொண்டு இதற்குமேல் ஆகவேண்டிய அரசியல்காரியங்களைத்தொடர்ந்து நடத்தவேண்டியதே யோக்கியமான செயலாகும்.

அன்றியும் இத்தீர்ப்பின் மேல் பிரிட்டிஷ் பிரதமமந்திரி வெளியிட்டிருக்கும் அறிக்கையையும், இந்திய அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் அறிக்கையையும் கவனிப்போர், பிரதமமந்திரியின்மீதோ, இந்திய அரசாங்கத்தின்மீதோ சிறிதும் குறைகூறயிடமில்லையென்பதையும் அறியலாம். பிரதமமந்திரியின் அறிக்கையில்

"இம்முடிவு கூடிய விரைவில் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படும். இதற்குள் எல்லாச் சமூகங்களும், ஒற்றுமைப்பட்டு ஒருமுடிவுக்கு வந்தால் அரசாங்கத்தார் செய்திருக்கும் இத்தீர்ப்பைப்பாராளுமன்றத்தின் முன் வைக்கமாட்டார்கள். சமூகங்கள்

ஒரு முடிவுக்கு வராவிட்டால் தான் இம்முடிவு பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படும்"

என்றும், இந்திய அரசாங்கத்தாரின் அறிக்கையில்

"எல்லா சமூகத்தினரும் சேர்ந்து ஒருமுடிவுக்கு வரும் சந்தோஷகரமான நிலைமை ஏற்படுவதாயிருந்தால் அதற்கு இடமில்லாமல் செய்துவிட பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. ஆகையால் புதிய இந்திய அரசாங்கச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறுமுன் தனிப்பட்ட மாகாணங்களைப் பொறுத்தோ, அல்லது பிரிட்டிஷ் இந்தியா முழுவதையும்பற்றியோ சம்பந்தப்பட்ட எல்லாச்சமூகத்தினரும் சேர்ந்து ஒரு ஒற்றுமையான வேறுமுடிவுக்கு வந்துவிடுவார்களாயின் அம்முடிவை, இந்ததீர்ப்புக்கு பதிலாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் பாராளுமன்றத்திற்குச் சிபார்சு செய்வார்கள்"

என்றும் குறித்திருப்பதைக் காண்பவர்கள் அரசாங்கத்தார் மீது குறைகூற இடமுண்டா என்றுதான் கேட்கின்றோம்.

இனிமேலாவது இம்முடிவு இந்தியாவுக்குப் பொருத்தமில்லாததாக இருந்தால் இந்திய மக்களால் விரும்பப்படாதது என்பது உண்மையாக இருந்தால், இதன்மூலம் வகுப்புவாரி ...ரதிநிதித்துவமும், தனித்தொகுதி ...தேர்தல் முறையும் பெற்றிருக்கிற மக்களால் ஒப்புக்கொள்ளப்படாததாக இருந்தால் காங்கிரஸ்காரர்களும் வகுப்புவாதத்தை விரும்பாத மிதவாதிகளும், மற்ற வயிற்றுப்பிழைப்புத்தேசாபிமானிகளும், தங்கள் செல்வாக்கைக்கொண்டு இந்தியாவில் உள்ள சமூகங்களை ஒற்றுமைப்படுத்தி வேறு இவர்கள் விரும்புகின்ற மாதிரியான முடிவைச்செய்து அம்முடிவை எல்லாச்சமூகத்தினரையும் ஒப்புக்கொள்ளச்செய்து பிறகு பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் முன் கொடுக்கட்டுமே. இப்படிச்செய்தால் இப்பொழுது பிரதமமந்திரியின் தீர்ப்பு தானே அழிந்துபோய்விடுகிறது. இதையும் செய்யாமல் தீர்ப்பையும் ஒப்புக்கொள்ளாமல் கூச்சலிடுவது கையாலாகாத்தனமும், சுயநலத்தனமும், ஏதாவது கிளர்ச்சி பண்ணிக்கொண்டிருக்கவேண்டும் என்னும் மனப்பான்மையும், வீண் ஆர்ப்பாட்டமும் ஆகும் என்று நாம் கூறுவதில் எள்ளளவாவது தவறுண்டென்று யாராவது சொல்லமுடியுமா? இதற்க நமதுநாட்டின் உண்மை நிலையை அறிந்தவர்களும், நிதானமான அரசியல் வாதிகளும் ஆகிய திருவாளர்கள் சர் சாப்ரூ, சர். ரபீந்திரநாத் டாகூர், ஜார்ஜ் ஜோசப், ரைட்ஆனரபிள் சீனிவாசசாஸ்திரி முதலியவர்கள் இத்தீர்ப்பின்மேல் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தைக்காண்பவர்களுக்கும் நாம் கூறுவதன் உண்மை விளங்காமற்போகாது. ஆகையால் அவர்கள் கருத்துக்களையும் கீழேவெளியிடுகின்றோம்.

"நாமே நமக்குள் ஒரு சமரசம் செய்துகொண்டிருக்கலாம்; ஆனால் அவ்விதம் செய்துகொள்ளவுமில்லை; செய்துகொள்ளவும் முடியவில்லை.

ஆனால் தற்போதைய காலதேச வர்த்தமானத்தை மனத்திலிருத்தி தீர்ப்பின் அமைப்புகள் முழுவதையும் பொதுவாக நான் ஆராய்ந்து பார்த்ததில் இத்தீர்ப்பைக்கண்டிக்கவோ அல்லது மிகவும் சங்கடமான இவ்வேலையில் முதன்மந்திரி நல்லெண்ணங்காட்டவில்லையென்றோ கூற நான் துணியமாட்டேன்"

சர். சாப்ரூ.

ஃ ஃ

"நமது சமூகத்தினர் தக்க முறைகளைக்கொண்டு தற்போதுள்ள கொஞ்ச சுதந்திரத்தையும், மேலான வகையில் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும்"

சர். ரபீந்திரநாத் டாகூர்.

ஃ ஃ

"வகுப்புத்தீர்ப்பை சிலர் விரும்பலாம்; வேறு சிலர் விரும்பாதிருக்கலாம்; ஆனால் தற்போதைக்கு இதுவே முடிவான தீர்ப்பாகும். வேறுவழியில்லை என்பதை உத்தேசித்து இதை ஒப்புக்கொண்டுவிடுவதே புத்திசாலித்தனமாகும்"

ஜார்ஜ் ஜோசப்.

ஃ ஃ

"பலவகுப்பினரும் தங்களுக்குள் சமரசம் ஏற்படுத்திக்கொள்ளத்தவறிப்போய் அரசாங்கத்தின் கழுத்தில் இச்சங்கடமான கடமையை கட்டிவிட்டுத்தற்போது அதைப்பற்றிக் குறைகூறப்படுவது அழகல்ல..............சமாதானம் வேண்டுவோர் இத்தீர்ப்பைக்கண்ணியமாக ஒப்புக்கொள்ளவேண்டும்"

ரைட் ஆனரபிள் சீனிவாசசாஸ்திரி.

ஃ ஃ

மேற்காட்டிய அபிப்பிராயங்களை நிதானபுத்தியுள்ள யாராவது தவறு என்று கூறமுடியுமா? ஆகையால் வீண் ஆர்ப்பாட்டக்காரர்களின் பேச்சுக்களுக்குச் செவிசாய்க்காமல் முதலில் வகுப்புக்களும், மதங்களும் ஒழிவதற்கான வேலையைச்செய்ய வேண்டும் என்றும், இவ்வேலைதான் வகுப்புமத அரசியல் ஒழிவதற்கு வழியென்றும், இதற்குத்தற்சமயம் அரசியல் அமைப்பில் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும் தனித்தொகுதியும் அவசியம் என்றும் இவைகளைப்பெறுவதன்மூலம் ஒடுக்கப்பட்டுக்கிடக்கும் மக்கள் கொஞ்சமாவது அரசியல் அதிகாரம்பெற்றுத் தங்கள் சுயமரியாதைக்காக வேலைசெய்ய முடியுமென்றும், ஆதலால் பிரதமமந்திரியின் வகுப்புப்பிரச்சினை தீர்ப்பை ஆதரிப்பதே ஒழுங்கு என்றும் கூறுகின்றோம்.

---

## ஒத்திவைக்கப்பட்டது.

பட்டுக்கோட்டையில் இம்மாதம் 28, 29. ந்தேதிகளில் நடைபெறுவதாக விருந்த சுயமரியாதை மகாநாடு சிலஅசௌகரியங்களை முன்னிட்டு செப்டம்பர்மாதம் 3. 4. ந்தேதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டதென காரியதரிசி அறிவிக்கிறார்.

## மாகாளியம்மன் மகிமை.

### திருவிழாவில் ஒருவாலிபன் இறந்தான்.

23-8-32ந்தேதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கோவை உக்கடம் மாகாளியம்மன் உற்சவத்தில் வாணவேடிக்கையில் கதனை ஒன்றுதவறி சுமார் 18 வயதுள்ள கிருஷ்ணன் என்னும் வாலிபன் தலையில்தாக்க மூளைசிதறி சிறிது நேரத்தில் இறந்துவிட்டான். இத்தகைய "சாமிகளை" சக்திமிக்கவையென்று விழா நடத்திப் பொருளைப்பாழாக்குபவரின் அறியாமையை என்னென்பது என கோவை ஆர். கிசன் அவர்கள் அறிவிக்கிறார்.

## நாகை சுயமரியாதைச் சங்கம்.

14-8-32ந்தேதி மாலை 7 மணிக்கு இச்சங்க வாராந்திரக்கூட்டம் சங்கத்தலைவர் தோழர் ஆர். வி. கோபால் அவர்கள் தலைமையில் கூடிற்று. அது சமயம் "சுயமரியாதையும், நமது கடமையும்" என்பது பற்றி தலைவர் முகவுரையாக பேசியபின் தோழர்கள் எம். ஏ. கோவிந்தசாமி, அடைக்கலசாமி, என். சிவஞானம், கே, முருகேசன் முதலியவர்கள் நீண்ட நேரம் பேசிய பின் தலைவர் முடிவுரையோடு கூட்டம் இரவு 10 மணிக்கு கலைந்தது.

21—8—32ந் தேதி மாலை 6-30-மணிக்கு சங்க கட்டிடத்தில் இச்சங்க மூன்றாவது வாராந்திரக்கூட்டம் சங்கத்தலைவர் தோழர் ஆர். வி. கோபால் அவர்கள் தலைமையில் கூடிற்று.

தலைவர் முடிவுரைக்குப்பின் "கல்வி" என்பது பற்றி தோழர்கள் ஏ. கோவிந்தன், வி. சாமிநாதன், ஞானனந்தன், எம். ஏ. கோவிந்தசாமி, என். உசேன், கே. முருகேசன் முதலியவர்கள் பேசினார்கள்.

தலைவர் முடிவுரையாக ரஷிய நாட்டில் நடை பெறும் கல்வியே நாட்டிற்கு ஏற்றது எனக்கூறி இரவு 9-30மணிக்கு கூட்டத்தை முடித்தார்.

31—8—32ந்தேதி புதன் கிழமை மாலை 6-30 மணிக்கு புது ரோட்டிலுள்ள சங்கக் கட்டிடத்தில் இச்சங்க மெம்பர்களின் கூட்டமொன்று நடைபெறும். ஆதலால் மெம்பர்கள் தவறாது விஜயம் செய்ய கோறப்படுகிறது. (ஒரு நிருபர்)

## காளியப்பன்.

தோழர் நாகை, காளியப்பன் அவர்கள். கிருஷ்ணகிரி, வாணியம்பாடி, திருப்பத்தூர், முதலிய இடங்களுக்கு சுயமரியாதை தோழர்கள் அழைப்புக்கினங்கி சென்ற 25 தேதி சென்றிருக்கிறார். (ஒரு நிருபர்)

## சுயமரியாதைச் சங்கத் திறப்புவிழா.

சிதம்பரம் தாலூக்கா பரதூர் வாலிப சுயமரியாதைச் சங்கத் திறப்புவிழா 14—8—32ல் திராவிடன் ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திறப்புவிழாவிற்கு பல விடங்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். தலைவரவர்களுக்குஷை சங்கத்தாரால் ஒருவரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்துக்கொடுக்கப்பட்டது. பின் வரவேற்புத்தலைவர் தோழர் சிங்காரவேலு அவர்கள் யாவரையும் வரவேற்று ஒரு சொற்பொழிவாற்றினர். பின் சங்கத்தைப்புதுவை தோழர் பாரதி தாஸன் அவர்கள் திறந்து வைத்து ஒரு அறிய சொற்பொழிவாற்றினர். பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

### பிற்பகல் கூட்டம்.

அன்றுமாலை மூன்றுமணிக்குமேல் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதுபோது தோழர்கள் பெரியசாமி, ராமாமிர்தத்தம்மாள், சிங்காரவேலு, பொன்னம்பலனர், பார்த்தசாரதி ஆகியவர்களால் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். பிறகு சில தோழர்களால் சில கேள்விகள் கேட்கப்பட்டது. அக்கேள்விகளுக்குத்தலைவரவர்கள் யாவருக்கும் விளங்கும்படியாகப் பதிலளித்தார். வந்தனோபசாரம் கூறப்பட்டது தலைவர் முடிவுரைக்குப்பின் சங்கத்திற்கு தலைவர், உபதலைவர், காரியதரிசி, நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டபின் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

## ஆம்பூர் ஆதிதிராவிடர் பொதுக்கூட்டம்.

20—8—32ந்தேதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு முத்தாலம்மன் கோவிலினருகில் ஆதிதிராவிடப் பொதுக்கூட்டம் ஒன்றுநடை பெற்றது. அக்கூட்டத்திற்குசென்னைஹைக்கோர்ட்டு வக்கீல் திரு. எஸ். எம். ஞானப்பிரகாசம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை வகித்தார். பின் தலைவருக்கு மாலைகள் சூட்டப்பட்டது. பின் திரு. ஏ. வி. பெரியசாமி அவர்கள் தலைவர் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் ஆதிதிராவிடர்களுக்குச்செய்துவரும் ஊழியத்தைப்புகழ்ந்தும், ஆதிதிராவிடர்கள் முன்னேற்றத்தைப் பற்றியும், இன்னும் பல அரிய விஷயங்களைப்பற்றியும் பேசினர். பின் சில அன்பர்கள் பேசிய பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

## திருப்பதி மகத்துவம் செருப்பினிலா?

திருப்பத்தூர் தாலூகா சிங்கம் புணரியில் வெங்கடாஜலபதி பஜனை மடம் ஒன்றுளது. அதில் நெடுநாளாக நாராயணசாமி என்ற ஓர் சந்நியாசி வசித்துவருகின்றார்.

ஒருநாள் இரவுசந்நியாசியார்கனவில்திருப்பதி வேங்கடாஜலபதி (துளபமாலிகாபரணனாக) வந்து சில நிமிஷநேரத்தில் மறைந்ததாகவும், பின்னர் அவ்விடத்தில் சுமார் 15 அங்குல நீளமும், 7 அங்குல அகலமும் உள்ள (மனிதர் கால் அளவுக்கு மிகுந்த) செருப்பு ஒன்று கிடந்ததாகவும் சந்நியாசியாரால் தெரியவருகிறது. மறுநாள் அதிகாலையில் இந்தச்செருப்பு கனவில் தோன்றிய வெங்கடாஜலபதியே நாஸ்திகர்களாகிய சுயமரியாதைக்காரர்களுக்கு அறிவுறுத்தற் பொருட்டு இவ்வாறு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (திருப்பதி வாசிகளாகிய ஆஸ்தக அன்பர்களே மற்றொரு செருப்பு வெங்கடாஜலபதி திருச்சந்நதியில் இருக்கிறதா என்று தேடிப்பார்த்து அங்கிருப்பது எந்தக்கால் செருப்பு என்பதை தயவு செய்து வெளியிடுவீர்களாக.)

மேலும் திருப்பாலைக்குடி மஸ்தான் சகல வியாதிகள் ஊமை, செவிடு, முதலானவைகள் நிவர்த்திக்கு தீர்த்தம் கொடுத்தாற்போல வியாதியஸ்தர்களும் மற்றவர்களும் வியாதி சம்பந்தப்பட்ட கண், காது முதலான உறுப்புகளில் இந்தச்செருப்பால்அடித்துக்கொள்ளுகிறார்கள் அறியாமையால் மயக்கம் மிகுந்த ஆஸ்திகர்களே உங்களுக்கு இதுவிஷயம் சீக்கிரம் பரவக்கூடும் அல்லவா! ஆதலால் அரைவயிற்றுக்கஞ்சிக்கும் அரைத்துணிக்கும், ஆயிரக்கணக்கான மக்கள் அலையும் இக்காலத்து நீங்கள் தாழ்த்தப்பட்டோர்களுக்கும். அங்க ஈனர்களுக்கும் உதவாமல் அநேகம் ரூபாய் செலவு செய்துகொண்டுவந்து சிங்கம்புணரியில் செருப்பினால் அடிபடுவதுதான் பக்தியோ என்று அநுதாபமிகுந்து ஏ. ஆர். எழுதுகிறார்.

---

## பிரபல திருமணம்.

மாஜி ஹானரரி மாஜிஸ்ட்ரேட்டும், தாலூகா போர்டு மெம்பரும், முனிசிபல் கவுன்சிலரும், பிரபல பஞ்சுவர்த்தகரும், ஸ்டேன்ஸ்மில் ஏஜண்டுமான சென்னிமலை திரு. வி. எஸ். செங்கோட்டையா அவர்களின் ஏகபுத்திரன் வி. எஸ், லக்ஷ்மணனுக்கு நிகழும் ஆவணி மாதம் 25-ம்தேதி 9-9-32ல் கோயமுத்தூரில் ஷியார் பக்திவிலாஸ் பங்களாவில் திருமணம் நடைபெறும். அன்று மாலையும் மறுநாளும் சங்கீதக்கச்சேரி நடைபெறுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## திருச்சி வியாகுலமாதா கன்னியர் மடத்தில் ஜாதித் திமிர் தாண்டவம்.

சமதர்ம சூரியன் தோன்றி தன் கதிர் ஒளியை எவ்விடத்தும் வீசி எங்குமுள்ள இருளாகிய பழயமூடப் பழக்கவழக்கங்களையும், ஜாதி எனப்படும் திமிர் இருளையும் பள்ளிச்சமரசமே சகலமும் என ஓங்கி வரும் இக்காலத்தில் திருச்சியில் கன்னியர் மடம் எனப்பெயர்கொண்டுள்ள வியாகுல மாதா மடத்திலுள்ள இவர்கள் நமது மக்கள் முன்னேற்றத்திற்குவரக்கூடாதென இருமாப்புக்கொண்டு தலைமுடியை சீவி சடைபின்னி தொங்கவிட்டுக்கொண்டு வரப்படாத ஜாக்கெட் கைநீளமாக போடவேண்டுமென்றும் அப்படியிராவிட்டால் பள்ளியில் சேர்க்காமல் விரட்டி அடிப்பதும் இன்னமும் சுமார் 6 மைலுக்கப்பாலிருந்து வரும் நமது மக்களுக்கு மடத்தில் பணம் கொடுத்து அரை வேளை போஜனம் கொடுக்க உத்தாவு கேட்டால் பற்பல விதமாக அவ்விடம் நம்மக்கள் அவர்களோடு உறவாடாமல் பற்பல சூழ்ச்சிகளை செய்தும் வருகிறார்கள். அவர்களோடு சுவாமியார் எனப்படும் புரோகிதர்களும் ஒத்துப்பல்லவி பாடுகிறார்கள் என்னே! கிறிஸ்து மதத்தின் நோக்கம் என் இவர்கள் பைபிள் எனப்படும் விவிலியத்தை மேற் குலத்திற்கும், தாழ்த்தப்பட்டவருக்கும் என தனித்தனியே ஏற்படுத்தி விட்டால் நலமாயிருக்கும் என நமது நிருபர் எழுதுகிறார்.

## பிராமணீய மொழிந்ததிதி

உடையார் பாளையம் தாலூக்கா இடங்கண்ணி கிராமத்திலிருக்கும் பிரபலஸ்தர்களான திருவாளர்களான வி. குருசாமி வாண்டையார், கண்ணுசாமி வாண்டையார் ஆகிய இருவரும் தன் தாயார் இரத்தினம்மாள் இறந்த 16 ம் நாள் செய்ய வேண்டிய சடங்கை பார்ப்பனரின்றி சுத்தசுயமரியாதை முறைப்படி நடத்தப்பட்டது. அன்று ஏழைகளுக்கு சமபந்தியுடன் உணவளிக்கப்பட்டது இவ்விதம் நடத்துவதற்கு காரணமாயிருந்த தோழர் காளிமுத்து அவர்களைப்பாராட்டுகிறோமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## மதுரை

### சுயமரியாதைச்சங்கம்.

3-7-32 பகல் பன்னிரண்டு மணிக்குமேல் மாரியம்மன் தெப்பக்குளத்தின் வடசருகிலுள்ள தோப்பில் சுமார் 200 பேர்கொண்ட சமபந்தி போஜனம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. இதில் பெரிதும் ஆதிதிராவிடர்களால் பரிமாரப்பட்டு தண்ணீர்கொடுக்கப்பட்டது. எல்லாருடைய மனதையும் கவர்ந்தது. மற்றும் வெளியூர் வாசிகளும், கலாசாலைமாணவர்களும், முஸ்லீம் சகோதரர்களும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். போஜனவேலைகளை முழுதும் ஏற்று சிறப்பாக நடத்திய தோழர்களான ஏ. என். வெங்கிடசாமி, பி. வி. விநாயகமூர்த்தி, எஸ். வி. ராமலிங்கம், ஏ. எஸ். அருணாசலம், முதலியவர்களின் வேலைகளைப்பாராட்டி நன்றி செலுத்தப்படுகிறார்களெனக்காரியதரிசி விநாயகமூர்த்தி எழுதுகிறார்.

## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.
பாபனாசம். அப்துல்ரசாக் சாயபு,
இரும்புவியாபாரம்.
காஞ்சீபுரம். எம். கே.எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி
கோயமுத்தூர்.
வி. ரங்கராஜுலு, நீயூஸ்
ஏஜண்ட், ராஜவீதி.
சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

---

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1931-ஞ O. S. No. 708.
1932-ஞ I. A. No. 173.

சுப்பராய ஆசாரி—வாதி.

கோபிசெட்டிபாளையம் டி. மு. கோர்ட்டு சரகம் கோபிசெட்டிபாளையம் தாலூகா இக்கரைக்கொடுவேரியிலிருக்கும் சின்னிய கவுண்டன் மகன் பழனிக்கவுண்டன் 1, பல்லடம் தாலூகா காரிங்கராயம்பாளையத்திலிருக்கும் அய்யாவு செட்டியார் மகன் குப்பண்ண செட்டி 3,— 1 & 3 பிரதிவாதிகள்.

உங்கள் பேரில் ஏற்பட்டிருக்கும் Preliminary decree படி தொகை செலுத்தாததால் ஷை டிக்ரியை Final decree செய்ய வேணும் என்றும் வாதி மனுக்கொடுத்திருக்கிறபடியால் அதைப்பற்றி உமக்கு ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால் அதை நீர் நாளது 1—9—32 தேதி இந்தக்கோர்ட்டில் ஆஜராகி அறிவித்துக்கொள்ளவும். இல்லாவிட்டால் ஷை விஷயமாய் ஒரு தலை பக்ஷமாகத் தீர்மானிக்கப்படும்.

C. S. குப்புசாமி அய்யர்,
வக்கீல், திருப்பூர்.


# இன்பமணி. இன்பமணி.

ஆண் பெண் இருபாலரும் நோயுள்ள போதும், நோய் இல்லாத போதும் சாப்பிடலாம். கெட்ட நடத்தையாலும், அதிகச் சேர்க்கையாலும், உண்டாகும் நரம்புத்தளர்ச்சியை (நபும்சகம்) நீக்கி நாடிகளைப் பலப்படுத்தி உணர்ச்சியை உண்டுபண்ணும். தூக்கமின்மை, இருதயத்துடிப்பு, மயக்கம், ஞாபகக்குறைவு, அஜீரணம், இந்திரியக்கசிவு, வெள்ளை வெட்டை, இரத்தவெட்டை, கொருக்கி, நீரழிவு, நீர்க்கடுப்பு முதலியவைத் தவறாமல் நீக்கி திடகாத்திரம், வாலிபத்தன்மை, சுறுசுறுப்பு சலிப்புத்தோன்றாத மன உணர்ச்சி இவைகளை அளிக்கும்.

போலி விளம்பரங்களைக்கண்டு மோசம் போகவேண்டாம்.
உத்திரவாதமுள்ள "இன்ப மணி"யை எல்லாரும் சாப்பிடுங்கள்.
சித்தானந்த வைத்தியசாலையில் செய்யப்பட்டது.

சோல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்,

## அருணகிரி அண் கோ.,

தபால் பெட்டி நெ. 222,
49 லிங்க செட்டி தெரு, சென்னை.

## மதிப்புரைகள்.

### ஏழையழுத கண்ணீர்.

இஃது பாகீரதி முதலிய உணர்ச்சிததும்பிய சீர்திருத்தக்கதைகளை யெழுதிய தோழர் அ. ரெத்தினசபாபதி அவர்களால் எழுதப்பட்டதாகும். ஹிந்து சமூகத்தை மாசுறச்செய்யும் மூடப்பழக்கவழக்கங்களிலும், வைதீகக்கட்டுப்பாடுகளிலும், ஒன்ருகிய வைதவ்யத்தின் அலங் கோலம் இதில் நன்கு விவரிக்கப்பட்டு, கோமதி, பங்கஜம் முதலான பாலிய விதவைகளின் பரிதாப நிலையும், அவர்களது முடிவும் கண்முன் நடப்பவை போன்று அத்தகைய உருக்கமான பாஷையில் வரைந்து காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு விதவைகளை மூடக்கட்டுப்பாட்டிலும், பழக்க வழக்கத்திலும் ஆழ்த்தி, அமிழ்த்தி, நசுக்கி வைத்திருக்கும் சுயநல வைதீக கூட்டத்தை இவர்களது கண்ணீர் வாழ்கொண்டாருக்கு மெனமுடிவு கட்டியுள்ளது சாலவும் பொருந்தும். இது போன்ற புத்தகங்கள் சீர்திருத்த உலகிற்கு எத்தனையிருப்பினும் தகும்.

விலை பிரதி 1 க்கு அணு 0—1—0

கிடைக்கு மிடம்

சித்தார்தா புத்தகசாலை

ஆண்டர்சன்பேட்டை K. G. F.

### ஆபீஸ் மாத்திரை.

தென்னூர் கோஷாயி வைத்தியசாலையில் தயாரிக்கப்படும் ஆபீஸ் மாத்திரைகள் ஒரு புட்டி வரப்பெற்று உபயோகித்துப் பார்த்தோம். இஃது ஆகார வகைகளில் காலங்கடந்தோ, அமிதமாக உட்கொள்வதாலோ அல்லது வேறு எவ்வித காரணங்களாலோ ஏற்படும் அஜீரணம் முதலியவற்றைப் போக்கி மலப்பிரவர்த்தியை சுலபமும், கஷ்டமில்லாது செய்வதில் மிகுந்த குணமுள்ளதாயிருக்கிறது. மலச்சிக்கலே பல நோய்களுக்குக் காரணமாயிருப்பதால் இஃது மிகுந்த உபயோகமானதாயிருக்கும்.

### குரு தைலம்.

திருச்சி டாக்டர் மதுரம் அவர்களால் தயாரிக்கப்படும் குரு தைலம் என்ற தலைவலி மருந்தும், பற்பொடியும் கிடைக்கப்பெற்ருேம். தலைவலி மருந்து நல்ல முறையில் செய்யப்பட்டுளது. பல மருந்துகள், சரக்குகள் சேர்க்கப்பட்டு அமிர்தாஞ்சனம் போன்ற முறையில் செய்யப்பட்டுள்ளது.

### சித்தரசம்.

பழனி நித்தியானந்த வைத்தியசாலையில் செய்யப்படும் சித்தரசம் ஒரு புட்டி வரப்பெற்ருேம். இஃது பல நோய்களுக்கு உட்பிரயோகத்துக்கும், வெளிப்பிரயோகத்திற்கும் பிரயோசனப்படுகிறது. தலைவலியைத் தீர்த்துக் குணப்படுத்துவதில் சிறந்து காணப்படுகிறது. அஃதேபோன்று மந்தம், அஜீரணம் முதலியவற்றைப்போக்க நல்ல குணமுள்ளதாயிருப்பதோடு, சுரம் வருவதான அறிகுறிகள் காணப்பட்டு இதை உபயோகித்தால் சுரத்தைத்தடுத்துவிடக் கூடியதாயுமிருக்கிறது. இவ்விதபல நோய்களைத் தீர்க்கக்கூடிய இம் மருந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவசியமென்றே எண்ணுகிருேம்.

### சுயமரியாதை வாலிபர் சங்கம், கோயமுத்தூர்.

21-8-32 தேதி ஞாயிறன்று ஷை சங்கத்தின் வாராந்திரக் கூட்டமொன்று தலைவர் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடியது. தோழர் எஸ். கே. கஸ்தூரி அவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் பாடினர். பின்னர் தோழர் சி. பி. முத்துசாமி பி. ஏ. அவர்கள் 'ஒப்புரவறிதல்' அல்லது 'சமூக ஊழியம்' என்னும் பொருள்பற்றிப் பேசினர். அதையாதரித்துத் தோழர் ஆர். கிஸன் அவர்கள் பேசியபின் அடிபிற்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

கோவை சுயமரியாதை வாலிபர் சங்க ஆதரிப்பாளர் தோழர் எஸ். என். பொன்னையாஅவர்கள் கோவை நீலகிரி ஜில்லா கல்விக்கழகத் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை இச்சங்கம் பெரிதும் பாராட்டுவதோடு, அப்பதவியைப் பொதுவாகப் பாமர மக்களும், சிறப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களும், பெண்களும் நலம் பெறுந்துறையிற் பயன் படுத்தவேண்டுமாய் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனேபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்ததெனக் காரியதரிசி அறிவிக்கிருர்.


## பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் குணம் தரும். தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0.

### கெர்ப எண்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும், கர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். புட்டி 1க்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எமது கியாட்லாக்

# இனம்!

சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. விபரத்திற்கு எழுதுங்கள்.

### ஸ்கலித நிவாரணி.

பலஹீனத்திஞலும், உஷ்ணத்திஞலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தாஞக வெளிப்படுவதை நிற்பாட்டி தேகதிடத்தைத்தரும். புட்டி ஒன்றுக்கு ரூ. 2—0—0.

## மலையப்பசாமி,

வைத்தியசாலை, பழநி. S. I.



## ஸ்ரீராமவிலாஸ் குரிசிட் பண்ட் கொல்லம்.

### முக்கிய அறிவிப்பு.

சென்ற மே மாதத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டு இவ்வளவு குறுகிய கால அளவில் நல்ல பயனளிக்கும் வேலை செய்துவரும் ஸ்ரீராமவிலாஸ் குரிச்சிட்பண்ட் அபிமானிகளும், ஏஜண்டுகளும் கேட்டுக்கொண்டதற்கிணங்க நம்மிடமிருந்து டிக்கட்டுகளும், டிக்கட்புஸ்தகங்களும் பெற்றுக்கொண்டவர்களுக்கு இதனுல் தெரிவித்துக்கொள்வதென்னவென்றால்:—

முதல் சீட்டெடுக்கும் தேதி 1932-ஹு டிசம்பர்-மீ 26-தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. கவுண்டட்டர் பாயில்களும் டிக்கட்டுகளின் விற்பனைத்தொகையும்டிசம்பர் மாதம் 15 தேதிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

தவிர எக்காரணம் கொண்டும் வேறுதேதிக்குஒத்திவைக்கப்படமாட்டாதென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மற்ற விபரங்களறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பினுல் பதில் தெரிவிக்கப்படும்.

குறிப்பு:—எல்லாக்கடிதங்களும் இங்லீஷில் தெளிவாய் எழுதப்படவேண்டும். டிக்கட்டுகள் ரொக்கத்திற்கு கொல்லம் பேங்க் லிமிடெட்டின் எல்லாகிளைகளிலும் கிடைக்கும். கடிதங்கள் கீழ்கண்ட விலாசத்திற்கே எழுதியனுப்பப்படவேண்டும்.

The Sri Rama Vilas
Kuri Chit Fund
Quilon.

# "கற்பு" என்பது என்ன?

(தோழர் கே. நடராஜன்)

மனிதப்பிறவி இன்பமயமானது, சுயேச்சையானது, இவ்வகை உயிர்ப்பிராணிகள் தான் மிகவும் அறிவுள்ளது, தந்திரமுள்ளது. இம்மனித வர்க்கத்தில் இரண்டு பகுப்பு உண்டு (1) ஆண்ஜாதி, (2) பெண்ஜாதி, ஆனால் இரண்டுக்கும் சம உரிமை உண்டு.

வெகுகாலமாக இந்த ஆண்ஜாதி, பெண்ஜாதி வர்க்கத்தை அடிமைப் படுத்திக்கொண்டே வந்திருக்கிறது. அதற்கு ஒரு பித்தலாட்டமான செய்கையை கையாளப்பட்டு வந்திருக்கிறது. பெண்கள் அடுப்பண்டைவேலை செய்தல் மற்றும் வீட்டுக்காரியங்கள் யாவையும் செய்ய வற்புறுத்தப்படுதல் முதலியவற்றினால் அடிமைப் படுத்தப்பட்டிருப்பதுபற்றி நம் தலையங்கத்தின் கீழ் விளக்குவது அவசியமல்ல, நாம் எடுத்துக்கொண்டது பெண்கள் வற்புறுத்தப்படும் ஒரு கொடிய வழக்கம்.

இக்கொடிய வழக்கம் அநேகமாய் எல்லா நாடுகளிலும் நிறைந்து கிடந்தது. மதக்குப்பைகளிலும் நிறைந்துகிடக்கின்றது. இதற்குப்பெயர் தான் "கற்பு" இதனால் பெண் வர்க்கம் அளவற்ற துன்பம் அநுபவித்து வருகிறது. இன்பநுகர்ச்சி ஆணுக்கும் உண்டு, பெண்ணுக்கும் உண்டு.

இக்கற்பு என்னும் கொடிய வழக்கம் எப்படி உண்டாயிருக்கும் என்று யோசிக்குங்கால் சில நோயாளிகள் இன்பம் அனுபவிக்க அருகதையற்றவர்கள் செய்த சூழ்ச்சியே என்பது புலப்படும். அவர்கள் எப்படியாவது அழகிய யுவதிகளை மணந்துகொண்டிருக்கலாம். அவ்யுவதிகள் தங்கள் இச்சை பூர்த்தியாகவில்லை, நோயாளிகளின் கூட்டுறவு திருப்தியளிக்கவில்லை, என்று புகார் சொல்லியிருப்பார்கள். உடனே நோயாளிகள் தங்களுக்கு அழகிய பெண்களும் வேண்டும்; ஆனால் அவர்கள் நல்ல தேகக்கட்டு உள்ளவர்களிடம் சேர்ந்தால் நன்றாய் இன்பம் அனுபவித்து தங்களைப்புறக்கணிப்பார்கள் என்று தெரிந்து 'கற்பு' என்னும் வார்த்தையை உண்டாக்கி அதற்கு இப்பொழுது இருக்கும் அர்த்தத்தையும் உண்டு பண்ணினார்கள். கதைகளும் கட்ட ஆரம்பித்தார்கள. 'சாவித்திரி என்னும் பெண் தன்கணவனுடைய உயிரை எமனிடமிருந்து மீட்டாள்' (உயிரைக்கண்ணால் பார்க்க முடியாது கையால் தொட முடியாது, எமன் என்று ஒருவன் இல்லை. ஆகையால் இக்கூற்று நம்பத்தகுந்தது அல்ல.) 'அனசூயை தன்னுடைய கற்பினால் கல்லை வேக வைத்தாள்' (எப்படியோ அறியோம். ஓர்வித கண்கட்டுவித்தையாயிருந்திருக்கலாம்) 'தமயந்தி வேடனைச்சபித்தாள்' (பாம்பை ஏன் சபித்திருக்கக்கூடாது!) 'கொக்கென்று நினைத்தாய் கொங்கணவா; என்று ஒரு கற்பு நிறைந்த பெண் கேட்டாள் (ஒருவேளை மெஸ்மரிசம் முதலியன தெரிந்திருக்கலாம்.)— என்று பலவாறாக கற்பு என்பது ஓர் ஆச்சரியகரமான சக்தி என்றும், அதனால் ஆகாதது ஒன்றுமில்லை என்றும் பிதற்ற ஆரம்பித்தார்கள். அந்நாரீமணிகள் அக்கட்டுக்கதைகளை நம்பி வாளாவிருந்துவிட்டார்கள், வாழ்வில் சுகமில்லாமல் நோயாளிகளுடனேயே காலந்தள்ளினார்கள்.

ஒருத்தி ஒருவனை மணந்தவுடன் அவள் அவனுக்குத்தான் மனைவியாக இருக்கவேண்டுமாம். அவனிடத்தில் ஆண்மையில்லாமலிருந்தாலும், நோயாளியாயிருந்தாலும், அவனைக் கூடியேதான் தன் இச்சையைத்தீர்த்துக்கொள்ளவேண்டுமாம். அவனையேதான் தெய்வமாகக்கொண்டாடவேண்டுமாம். பிறமனிதனின் முகத்தைப்பார்த்து 'அழகாயிருக்கிறான்' என்றுகூட சொல்லக்கூடாதாம். மனிதனுக்கு உள்ள இச்சைபெண்ணிற்குமட்டும் கிடையாதா? மேனாடுகளில் கற்பு என்னும் பித்தலாட்டம் விலக்கப்பட்டுக்கொண்டே வரப்படுகிறது. அங்கு தம்பதிகள் ஒருவரையொருவர் பிரிந்து (Divorce) வேறுமணம் செய்து கொள்ளச்சட்டம் இடந்தருவது நம் அனைவருக்கும் தெரிந்ததே. தம்பதிகள் பிரிந்து வேறு மணம் செய்துகொண்டால் கற்பு என்னும் பித்தலாட்டம் இல்லாமல் போய்விடுகிறதல்லவா? அது இல்லாமலிருப்பதால் இன்பம் உண்டு அல்லவா? தம்பதிகள் பிரிந்து கொள்ள அனுமதித்தல் (Divorce) அவசியமல்லவா? பிரிந்துவிட்டால் கற்பு இல்லையல்லவா? கற்பிருந்தால் பெண்கள் அடிமைப்பட்டிருக்கவேண்டி வருகிறதென்பது இப்பொழுது தெரிகிறதல்லவா?

மனைவி பூர்ணகெர்ப்பமாயிருக்கும் போது புருஷன் தனக்கு இச்சையேற்பட்டால் வேறு ஸ்திரீகளிடத்தில் சம்போகம் வைத்துக்கொள்ளுவது போல் பெண்களும் ஏன் வேறு ஆடவர்களுடன் கூடி என் இச்சையைத்தீர்த்துக்கொள்ளக்கூடாது? ஆடவன் வேறு ஸ்திரீகள் சம்போகம் வைத்துக்கொள்ளலாம்! ஆனால் பெண்கள் வேறு ஆடவர்களுடன் கூடினால் கொலைகளுக்குக்கூட உள்ளாகிறார்கள்! இதென்ன பாரபட்சம் ஆடவன் தான் அடக்கமுடியாத இச்சையை, பெண்மணி மாத்திரம் எப்படி அடக்கிக்கொள்ளுவாள்? இதெல்லாம் சில சுயநலமிகளான ஆடவர்களின் சூட்சியேயன்றி வேறென்ன. இக்கற்பு என்பதை உலகத்தில் புகுத்திவிட்டதும் அவர்களது சுயநலமென்றறிக.

பெண் புருஷனல்லாத வேறொருவனைக் கூடிவிட்டால் அவள் ஒழுங்கீனமாகி விடுகிறாளாம். கற்புபோய் விடுகிறதாம் (முதலில் அக்கற்புஸ்திரீயின் எந்த பாகத்தில் ஒட்டிக்கொண்டிருந்ததோ தெரியவில்லை.)

ஒரு பலவீனமான ஆடவனுக்கு ஒரு அழகிய ஆரோக்கியமான பெண்ணை மணம் செய்வித்தால் அவள் எப்படிக்கற்பு என்னும் பித்தலாட்டத்தைக்கைக்கொள்ள முடியும்? அவள் தனக்குத்தகுந்த வேறொரு பலவானையே நாட முயலுவாள். இது இயற்கை ஆகையால் அவள் பலவீனமான கணவனை உதறித்தள்ள நேரிடுகிறது. ஆனால்கற்பு என்னும் கொடுமை, முட்டுக்கட்டை போடுகிறது. அவள் பெயரைக்கெடுக்கிறது, ஆயினும் அவள் வாழ்வு இன்புற, அவள் அவனை விட்டு விலகவேண்டியதவசியமாகிறது. அவள் கற்பு என்னும் வஞ்சகர்கள் சூழ்ச்சியை, உணர்ந்து அதைப்போக்கிக்கொள்ள முயலுகிறான். ஆனால் அவளுக்குச்சொத்துரிமை இல்லாததால் திண்டாட நேரிடுகிறது. வாணாளை வீணாகக்கழிக்க வேண்டிவருகிறது. கற்பு என்பது இக்கூற்றுக்களால் பெண்களை அடிமைப்படுத்துகிறது என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்குகிறது.

நேயர்களே! நன்கு யோசித்துப் பாருங்கள், ஆண்களுக்கு ஏற்படும் பலவித நுகர்ச்சிகள் பெண்களுக்கு ஏற்படுவதும் இயற்கைதானே. ஆண்கள் தவறிழைப்பதுபோல் பெண்கள் பிழைசெய்வதும் சகஜந்தானே. நாயகன் வெகுநாள் பிரிந்து வேறு ஊரிலிருந்தால் அங்கு எப்படி அவன் தன் இச்சையைத்தீர்த்துக்கொள்ளுவானோ அதேபோல் நாயகியும் செய்துகொள்ளுவது நியாயந்தானே அனுமதிக்கத்தகுந்தது தானே.

அன்பர்களே நீங்கள் உங்கள் பகுத்தறிவைஉபயோகித்துச்சிந்தியுங்கள் கற்பு என்பது அனுஷ்டிக்கக் கூடியதாயிருந்தால் பெண்கள் உயிருக்கும் துணிந்து அதைமீறுவார்களா? இசையாத பெண்ணை வற்புறுத்துவது குற்றந்தான். ஆனால் இருவரும் இசைந்துவிட்டால் (கண்ணோடு கண்ணோக்கின்) என் செய்வது? இதற்குக்கூட சுதந்திரம் வேண்டாமா? இன்ப நுகர்ச்சி இருபாலர்க்கும் சமம் அன்றோ. அதில் கற்பென்றும், பொற்பென்றும், கொள்வது அறியாமை மூடத்தனம், கொடுமை, சுயநலம்.


## Goshaye office pillss.



## கோஷாயி ஆபீஸ் மாத்திரை

——::——

உதவி டாக்டர் Dr. T. K. V Chalam.

சுகானந்த சடலத்தில் தன், பகுத்தறிவை அறிந்து அரிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தமனுபவிக்க, அல்லலற்ற சிவராஜயோகம் சாதித்து வருவோர்களுக்கும், முடிவுபெற்ற காரியங்களில் மனதை புகுத்தி சதா சஞ்சலம் அனுபவித்துவரும் இல்லறவாசிகளுக்கும் (ஆனந்த அருள் நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம்போல்) மூலாக்கினி தகித்து வருவதினால் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும், காலாக்கிரம ஆகார தவக்கத்தினால் முரணாகி, பித்தமதிகரித்த வெட்டையும், வாய்வும், உரவாகியது முதல், மலபந்தம், மலச்சிக்கல், மலம்தீய்தல், அன்னதுவேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், சூலை, கீல்வாய்வு, தாதுநஷ்டம், முதலியவை ஜெனிப்பது மலபந்த முள்ளோர்களின் அனுபவ சித்தி.

மேல்கண்ட உபாதையுள்ளோர்கள் இரவு போஜனத்துக்குப்பின் ஒரு மாத்திரையை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து ஒன்றிரண்டாய் மென்று ஜலம்விட்டு கொப்பளித்து (கொப்பளித்து) சாப்பிட்டால் வாய்வுகளை கலைத்து வெளியாக்கி மலம் தாராளமாய் கழிக்கும். சுவரம், தைலஸ்நானம் முதலிய யாவும் வழக்கம்போல் நடத்திக்கொள்ளலாம். ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணம் பெறக் கூடிய கோஷாயி ஆபீஸ் மாத்திரை 51 கொண்ட சீசா 1-க்கு 1—10—0; 101 கொண்ட மாத்திரை சீசா 1-க்கு ரூ. 3—0—0 வி. பி. பேக்கிங் சார்ஜ் வேறு. சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டார்கள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்த்து மணியார்டர் செய்யவும்.

டாக்டர் B. A. எதிராஜ்,
[கால்ராபைரி]
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

முழக்குகிறது. கல்வியை அபிவிருத்தி செய்யுங்கள். கைத்தொழிலில் ஈடுபட்டுழையுங்கள், விவசாயத்தில் ஊக்கம் செலுத்துங்கள். அயல் நாடு சென்று தொழிற் கல்வி கற்றுக் கொள்ளுங்கள், கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்துங்கள் என்று தூண்டுதல் செய்கிறது. மக்களில் ஜாதிபேதம், நிறபேதம் என்ற பேதங்கற்பியாதீர்கள், பகுத்தறிவுக்குச் சற்றும் பொருந்தாத எந்த மதக் கொள்கைகளையும் உடன் படுத்திக் கொள்ளாதீர்கள் என்று முடிவுகட்டியிருக்கிறது. எனவே உலகத்திலுள்ள மக்களை ஒன்றுசேர்த்து, கல்வியபிவிருத்தி, செல்வ அபிவிருத்தி, பகுத்தறிவுவளர்ச்சி ஆகிய பல நற்சாதனங்களை மக்கள் அடைந்து அன்னியோன்னியமான நேசமாக இருந்து இன்பவாழ்வை எய்துவதற்கு நமது சயமரியாதை இயக்கம் எத்துணை சிறப்பெய்திய கொள்கைகளையுடையதாயிருக்கின்றது என்பதை உணருங்கள்.

### தாழ்த்தப்பட்டவர்கள்

தாழ்த்தப்பட்டவர்கள் என்பவர்கள் மற்றவர்களால் முன்னேற வொட்டாமல் கொடுமைப்படுத்தி வைக்கப்பட்டவர்கள் என்பவர்களாவார்கள். நமது நாட்டைப்பொறுத்தமட்டில் புரோகிதர்களாகவும், குருக்களாகவும், மகந்து, ஜீயர், பட்டர்களாகவும், மதம், கடவுள் மார்தரீகம், மோட்சம், நரகம், பஞ்சாங்கம், சோதிடம், அர்ச்சனை, ஆராதனை, தீர்த்தம் என்பதாதி சாதனங்களால் உழைப்புள்ள மக்கள் பணங்களை கவர்ந்து சுகமாக காலங்கழிக்கும் ஒரு வகுப்பினரைத்தவிர, குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், நாங்கள் கடவுள் முகத்தில் பிறந்த உயர்ந்த ஜாதியார் நீங்களோ, கடவுள் கீழுறுப்புகளில் ஜெனித்த தாழ்ந்த ஜாதியார்கள் என்று பெருமை பாராட்டிக் கொண்டிருக்கும், பார்ப்பனவகுப்பாரைத்தவிர ஏனைய பார்ப்பன ரல்லாதவர்களில் ஒவ்வொரு வகுப்பாரும் ஒவ்வொரு இடங்களிலும், சந்தர்ப்பங்களிலும், கொள்கைகளிலும் ஒவ்வோர் விதமாய்த் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருந்துவருகிறார்கள். என்றாலும், ஆதிதிராவிட மக்களைப்போல் தாழ்த்தப்பட்டவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டவர்கள் இந்தியாவில் எவர்களுமில்லை. ஆனால், கொடுமைப் படுத்தப்பட்டவர்களெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் கண் விழித்து தத்தம் விடுதலை போர்முரசை முழக்கி எழுந்திருக்கும் இந்த 20-ம் நூற்றாண்டிலே, ஒரு மனிதன் மற்றவனுக்கு சொத்தல்ல அடிமையல்ல என்னும் கொள்கையை யுடைய பிரிட்டிஷ் ராஜாங்கம் இந்தியாவில் நீதிசெலுத்தும் இந்தக்காலத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றத்தைத்தடுத்து விடலாம் என்றுயாராவது எண்ணக்கூடுமானால் அவர்களை ஏமாளித்தம்பிரான்களென்று சொல்லுவதைத்தவிர வேறொன்றுமில்லை.

மகா ஜனங்களே!

தாழ்த்தப்பட்ட ஜனசமூகம் விடுதலைபெற்று சமஉரிமையடைவதற்கும், மூடப்பழக்க வழக்கங்களில் சிக்குண்ட மனிதர்கள் பகுத்தறிவெய்துவதற்கும், இன்னும் எத்தகைய நற்செய்கைகளும், இத்தகைய மகாநாடுகள் பலஇடங்களிலும் தொடர்ந்து கூடியோசித்துத்திட்டங்களை வகுத்து சொல்லளவில் எழுத்தளவிலன்றி, செய்கையளவில் காட்டினால்தான் ஜெயமடைய முடியும்.

---

விற்பனைக்குத்தயார். முந்துங்கள். விற்பனைக்குத்தயார்.

## தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,

## அவர்கள் எழுதிய

# "கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலே, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கே யொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்யுரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞான மூகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விளக்கப்பட்டுளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சுமார் 80 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

# கொலை செய்த ஆஸ்திகப்பிச்சு.

(தோழர் கேசன்)

நீதிபதி;—கொலையாளியே! நீ அந்த சமதர்மன் என்பவனை க்கொலை செய்தது உண்மையென்று ஒப்புக்கொள்ளுகிறாயா?

கொலையாளி:—ஆம் பிரபு. நான் அந்தச்சண்டாளனை கொலைசெய்தது உண்மையென்று ஒப்புக்கொள்ளுகிறேன். என்றாலும் நான் ஒரு ஆஸ்திகன். ஈஸ்வரனிடத்தில் பரம பக்தியுடையவன். அவனன்றி ஓரணுவும் அசையாதெனும் சத்திய நியதியை நான் அப்படியே ஒப்புக்கொள்கிறவன். ஆகவே அந்த சமதர்ம சண்டாளன் அந்தப்பாவி. லோக நாயகனாகிய ஈஸ்வரனை இல்லாததெல்லாம் சொல்லி, இழிவான சொற்களால் தூஷித்ததோடு கடைசியில் அம்மாதிரியான கடவுள்கள் ஒன்றுமில்லை என்றுகூட நெஞ்சுத் துணிவோடு என்னிடத்திலேயே வாதாட வந்து விட்டானென்றால் அதைநான் எப்படித்தான் பொறுத்துக்கொண்டிருக்க முடியும். அப்பயலை துண்டு துண்டாக கிழித்து சித்திரவதையல்லவோ செய்திருக்கவேண்டும். ஏதோ அவனதிர்ஷ்டம் ஒரு கத்திக்குத்தோடு தொலைந்து போனான் என்றாலும் நான் கிஞ்சிற்றும் இந்த விஷயத்தில் எவ்வித லாபமும் ஏற்படுமென்று கருதியவனல்ல. லோக க்ஷேமத்திற்கு இம்மாதிரியான நாஸ்திகர்கள் ஒழிந்து போவதுதான் சாஸ்திரோக்தமானது. இன்னும் கவனிக்கவேண்டுகிறேன். இந்த செய்கையை செய்ததுகூட நானேசெய்தேனென்றுதற்பெருமை செய்துகொள்ள இஷ்டமில்லை. எல்லாம் அந்த ஈஸ்வரனுடைய சித்தம். நானோ அந்த ஈஸ்வரனுடைய ஆயுதம். அந்த கொலையுண்டபாவி என்கையால் மாளவேண்டுமென்ற லெபியும் அவன் தலையில் பிர்மா எழுதியிருக்கவேண்டும். ஆகவே பிரத்தியட்சத்தில் என் கையால் அவன் குத்துண்டு இறந்தானென்று தெரிந்தாலும் அதற்குநான் பாத்திரவாதியல்ல என்பதோடு அப்பேர்ப்பட்ட ஒரு கடவுளை நிந்திக்கும் ஒரு நாஸ்திகனை கொன்றது அவ்வளவு பெரிய குற்றமாகக் கருதாது என்னை மன்னித்து விடுதலை செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

நீதிபதி:—கொலையாளியே! உன்னுடைய வாதம் உண்மையில் விசித்திரமாகவேயிருக்கிறது. ஏதோ நீ கொலை செய்தது உண்மையென்பதற்கு வெளி சாட்சியங்கள் பலமாக இருக்கிறது. நீயும் அதை ஒப்புக்கொண்டு விட்டாய். அதனால் அரசாங்கச் சட்டப்படி உனக்கு "தூக்கு" தண்டனை அளிப்பதைத்தவிர்த்து வேறு மார்க்கமொன்றுமில்லை. அரசாங்க சட்டமானது எவ்வளவோ குற்றமுடையதாயினும் மனிதனுடைய பகுத்தறிவிலிருந்து பிறந்ததென்பதும் காலப்போக்கிற்கு தக்க விதத்திலும் பகுத்தறிவிற்கு ஒத்த விதத்திலும் திருத்தி அமைத்துக்கொள்வதற்கு வேண்டிய வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. பகுத்தறிவைத் தவிர்த்து மனிதனுக்கு வேறு வழிகாட்டியில்லை. இந்த உலகத்தில் எந்த நடவடிக்கைகளும் இந்த பகுத்தறிவிற்கு ஒத்து நின்றால் அதுவே ஒரு சமாதானமும் நீதியாகவும் இருக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது. சாஸ்திர சம்பந்தமென்றும், கடவுள் செயலென்றும் ஒருவிதத்தில் நீ சொல்வதாயினும் அது சரியானபடி தக்க சாட்சியங்களோடு நிரூபிக்காதவரையில் அவைகளை எப்படி ஒப்புக்கொள்ள முடியும். இன்னொன்று, ஏதோ என் அந்தரங்கத்தைச் சொல்கின்றேன். நீ அவனை கொலை செய்தது ஆஸ்திகர் பலருக்கும் திருப்தியை அளிக்கக்கூடியதாய் இருக்கலாம். அது உனது சாஸ்திர சம்மதமாகவும் இருக்கலாம். இருந்தாலும் அதற்கு தக்க விதத்தில் நீங்கள் தோழர் காந்தியார் கூறும் "ராம ராஜ்யத்தில்" வேண்டுமானால் இந்தக்கடவுள்களும் சாஸ்திரங்களும் நீதி பரிபாலிக்கலாம். ஆனால் ஒரு சாரார் அந்நிலை ஏற்படவேண்டுமென்று எவ்வளவோ பிரமாதப் படுத்திக்கொண்டு வருகிறார்களென்பதை நான் அறிவேன். "ராமராஜ்யத்தில்" நீதி ஆஸ்திகர்களுக்கு ஒரு விதமாகவும் மற்றவர்களுக்கு ஒருவிதமாகவும் பாரபட்சத்தோடு பழைய சம்பிரதாயத்திற்கு பக்கபலமாயிருந்துவரும். ஆனால் அந்நிலைமை உண்டுபண்ணக்கூடிய ராமராஜ்யம் மறுபடியும் ஏற்படும் பொழுது வேணடுமானால் இது பலிக்கும். ஏற்பட்டால் உங்கள் அதிர்ஷ்டந்தான். நீங்கள் ஆஸ்திகத்தின் பேரால் எவ்வித அக்கிரமங்களையும் செய்து வரலாம். ஆனால் இப்பொழுது நிலவிவரும் நீதியோ அவ்விதமான வித்தியாசங்கள் பாராட்டாது சாட்சியங்களைக் கொண்டு நிரூபிக்கின்ற அளவிற்கும் மற்ற சம்பவாதி குறிகளைக்கொண்டுத்தான் உண்மையையும் பொய்யையும் இது இதுவென்று நிர்ணயித்து வருகின்றதே ஒழிய வேறு மார்க்கமில்லை. அதற்குமேல் நான் உனக்கு எவ்விதத்திலும் அனுதாபமளிப்பதாயின் அது என் கடமையை மீறி நடந்ததாகும். அமுலிலிருக்கும் சட்டத்திற்கும் முரண்பட நடந்ததாகி குற்றத்திற்கு ஆளாக நேரிடும். ஆகவே உனக்கு அளித்த "தூக்கு" தண்டனையை உறுதிப்படுத்துகிறேனென்று பொறுமையாக பதிலளித்தார்.

கொலையாளி:—ஐயோ! இதுவும் அடுக்குமா! கலிகாலமென்பதுபிரத்தியட்சமாகப் போய் விட்டதே! நான் யாவும் கடவுள் சித்தம், சாஸ்திர சம்மதம் என்று எவ்வளவோ கூறியும் அதை மதியாமல் இம்மாதிரி தீர்ப்புக் கூறுவது தர்மமாகுமா! கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக இந்த நீச சட்டத்தை பரிபாலிக்கின்ற உமக்கு நான் சொல்லும் தர்ம நீதி எப்படி விளங்கும்! நான் செய்தது குற்றமானால் அதற்குத் தண்டனையளிப்பது கடவுளுடைய உரிமை. அதற்குப் பல விதத்திலும் ஜென்மா ஜென்மங்களுக்கும் நரகவேதனை அநுபவிக்க நேரிடும். கடவுளாகப் பார்த்து எதைச் செய்தாலும் அது எனக்குச் சம்மதம். அந்தக்கடவுள் உரிமையை நீர் பறிமுதல் செய்வது அக்கிரமம். உமக்கு நாஸ்திகன் போகின்ற கதிதான் கிடைக்கும். இனி எது வேண்டுமானாலும் செய்து கொள்ளும். கடவுள் ஒன்று (ஆகாசத்திலிருந்து) பார்த்துக்கொண்டு இருக்கின்றது என்று கூறி ஓலமிட்டான்.

நீதிபதி:—அட மூடமே! நான் இதுகாறும் பொறுமையாகவே உன்னுடைய வாதங்களை செவியுற்றேன். எனினும் நீ வசை புராணம் தொடுத்ததானது உன்னுடைய கேவல புத்தியை நீயே நிரூபித்து விட்டாய். நீ ஒரு கொலையாளியாக இருந்தும், அதையும் நியாயமின்றி சாஸ்திரோக்தமென்றும் சொல்லுவதற்கும் துணிந்தால் உன்னுடைய நெஞ்சழுத்தம் எவ்வளவென்று சொல்லுவது. அது உன்னுடைய குற்றமல்ல. ஆஸ்திகமென்னும் மூடமதியால் சுய அறிவை இழந்து திரியும் ஏனையோர்களும் இம்மாதிரியே அறிவு கெட்ட விதத்தில் பிதற்றுவது சகஜமாகவே இருக்கிறது. நிரூபிக்க முடியாததும், நிச்சயித்து அது இது என்று சொல்லக்கூடாததுமான ஏதோ ஒன்றை கடவுளென்று சொல்லிக்கொண்டு ஏதோ பல பிற்போக்காளர்களும், சுயநலமிகளும் வாயில் வந்தபடி எழுதி சாஸ்திரமென்றும், சம்பிரதாயமென்றும், பழக்க வழக்கங்களென்றும் கூறிக்கொண்டு திரிவது சுத்த முட்டாள்தனமன்றி வேறென்ன? இம்மாதிரி சுய அறிவை உபயோகிக்க வழியில்லாது மக்களின் அறிவைக்கெடுத்து வரும் உங்களுடைய கடவுள் நம்பிக்கைகளையும், சாஸ்திர சம்பிரதாயங்களையும் அடியோடு ஒழிக்கவேண்டுமென்று சுயமரியாதைக்காராகள் பிரயத்தினப்பட்டு வருவது எல்லா விதத்திலும் நியாயமென்பதையும் உன்னுடைய அறிவுகெட்ட வாதத்திலிருந்து நன்குணர்ந்து கொண்டேன். புத்தி. புத்தி.

சேவகர்களே! இவனை இழுத்துச் செல்லுங்கள் என கட்டளையிட்டார்.

கொலையாளி:—ஐயோ! பாழும்தெய்வமே! உனக்கு கண்ணில்லையா? ஏ முட்டாள் கடவுளே! ஒரு ஆஸ்திகனை இம்மாதிரி கஷ்டப்படும்படி சோதிக்கலாமா என்று சபித்துக்கொண்டே சென்றான்.

°° °°

கடவுள் என்று ஒன்று இருந்தாலன்றோ இவன் சபிக்கும் சத்தம் கேட்கப் போகின்றது. ஏன்? இருந்திருந்தால் இந்த கொலை தண்டனையை விதிக்க ஒருவனையும், அதை ஏற்க ஒருவனையும் படைத்திருக்குமா? கடவுள் என்பது அர்த்தமற்றது—கற்பித வார்த்தை என்பதே நமது அகராதி.

---

தபால் படிப்பின் அற்புதம்.

1000-மாணவர்கள்.

இளமையிற் படிக்கவில்லை என்று வருந்தவேண்டாம்!

தமிழ் வாசிக்க, எழுதத்தெரிந்தவர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிக்குலேஷன் கோர்ஸைத் தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்தபின் காலேஜில் சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தர பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் வாசிக்கலாம். லோயர் ஹையர்கிரேட் உபாத்திமார்கள், குமஸ்தாக்கள், ஆபீஸ் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப்பிரயோஜனமானது. பிராஸ் பெக்டசுக்கு உடனே ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
ஆறுமுகநேரி S. I. R.

[3ம் பக்கத்தொடர்ச்சி]

ஆனால் இன்றைய நிலைமையில் இந்நாட்டில் (இந்தியாவில்) என்ன நடக்கிறது? பணம்படைத்தவர்களும், சிறிய உத்தியோகஸ்தர்முதல் அரசர் வரையுமுள்ள உத்தியோகஸ்தர்களும் படிப்படியாக உயர்வான முறையில் நல்ல சுத்தமான காற்றுள்ள இடங்களில் தாராளமாகக்காற்று வந்து போகத்தக்க மாதிரியில் உயர்ந்த வசதியான கட்டடங்களை அமைத்துக்கொண்டு, மெத்தைமேல் மெத்தைகள் கட்டிக்கொண்டு, இவைகாணாமல் மின்சார விசிறிகள் வைத்துக்கொண்டு சுத்தமான காற்றை அனுபவிக்கிறார்கள். இந்ததனவந்தர்களுடையவும், பெரிய ஆபீசர்களுடையவும், செல்வ நிலைமை நல்லவசதியான வாசஸ்தலங்களைத்தங்களுக்கென அமைத்துக்கொள்ள இடங்கொடுக்கிறது. ஆனால் இந்த ஒரு சிலரைத்தவிர மற்ற பலகோடி ஏழை மக்கள் தொழிலாளர்களாகவும், வறிஞர்களாகவுமிருக்கிறார்களே இந்த மனிதர்களின் நிலைமை என்ன?

## முதலாளியும், தொழிலாளியும்.

இந்தியாவிலுள்ள முதலாளி ஏழடுக்கு உப்பரிக்கையில் வெல்வட் சோபாவின் மீது சாய்ந்து மாளிகையைச் சுற்றிலுமுள்ள நந்தவனங்களிலிருந்து கிடைக்கும் அருமையான சுத்த ஆகாயத்தைச்சுற்றிலுமுள்ள நந்தவனங்களிலிருந்து கிடைக்கும் அருமையான சுத்த ஆகாயத்தைச்சுவாசிக்கிறானென்றால் அந்த முதலாளியிடம் அல்லும் பகலும் உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு வேலை செய்யும் ஏழைத்தொழிலாளியோ?— நகரத்தின் கோடியில் காற்றுப்புக முடியாதபடி நெருங்கி சாக்கடை கக்கூஸ் நாற்றங்களுக் கிடையில், மலேரியா, முதலிய விஷஜுரங்களை உண்டாக்கும் கொசுக் கூட்டங்களுக்கிடையில் ஓராள்சாவகாசமாகப் படுப்பதற்கும் முடியாத இடத்தில் தனது மனைவி, வயது சென்ற தாயார், குழந்தைகளுடன் அடைபட்டு காற்றேகிடையாமல் மூச்சுத்திணறுகிறான். அரசாங்க உத்தியோகஸ்தர்களான கலெக்டர், ஜட்ஜ், கவர்னர் வைஸ்ராய், இவர்களுக்குள்ளிட்ட நடுத்தர பரிவாரங்கள் எல்லாம் உல்லாஸமாகச் சுகந்தகாற்றைஅனுபவிக்கும் அதே நேரத்தில், அதே அரசாங்கத்தில் மாதம் ஒன்றுக்கு ஐந்துரூபா ஏழுரூபா சம்பளம் பெற்று, நானும் அரசாங்கச்சம்பளம்பெறுபவன்என்று அவன் கூறிக்கொள்ள இடமுள்ள தோட்டி "மற்றுமுள்ள அவனைப் போன்றோர், ஒரே குடிசையில் 1 டசன் ஆட்களும்; அரை டசன்பன்றிக்குட்டிகளுமாகப்படுத்துநித்திரைசெய்கிறான். தனவான்களுடையவும், உத்தியோகஸ்தர்களுடையவும் வாசஸ்தலங்கள் உயர்ந்த சுத்தமான இடத்தில் இருக்கின்றனவென்றால் இந்த தோட்டி முதலிய தொழிலாளிகளின் வாசஸ்தலம் மிகத்தாழ்ந்து சாக்கடை நீர்தேங்கும் சதுப்பு நிலங்களிலிருக்கிறது. உத்தியோகஸ்தர்களின் மாளிகைகளைச் சுற்றி நறுமணங்கமழும் நந்தவனங்கள் இருந்து நல்லகாற்றைக்கொடுத்து அழகு செய்கின்றனவென்றால், இந்தத் தொழிலாளிகளின் குடிசைகளைச்சுற்றிலும், குப்பைமேடுகளும், ஜலதாரைகளும், மலஜலங்கழிக்குமிடங்களும் கொசுக்கூட்டங்களும், குண்டலப்புழுக்களும் நிறைந்து மிகமிகக் கெட்ட அசுத்தக்காற்றைத்தந்து அவர்களது குடில்களை அலங்கரிக்கின்றன.— இவையாவும் இந்த நிமிஷமும் நாம் எந்த இடத்திலும் கண்களால் காணும்ப்ரத்தியட்சப் பிரமாணங்களல்லவா?

இவற்றிற்கென்ன சமாதானமென நாம்கேட்கையில் "அவரவர்களின் அந்தஸ்தின்படி இவைகிடைக்கின்றன" என்ற விடையைத் தவிரவேறென்னபதில் நமக்குக் கிடைக்க முடியும்? "அவனவன் விதிப்பிரகாரம் கர்மானுசாரப்பிரகாரம் கிடைக்கின்றன" என்ற அபத்தப்பதிலும் வைதிகர் களிடமிருந்து கிடைக்கலாம். ஆனால் இந்த உப்பும், சப்பு மற்றபதிலைத்தூரவைத்துவிட்டு, அவனவன் அந்தஸ்திற்குத் தக்கபடி இது கிடைக்கிறதென்னும்பதிலைப் பற்றிமட்டும் ஆராய்வோம்.

நாம் முதல்முதலில் இக்கட்டுரையில் கூறியபடி "காற்று"—சுத்தமான சுவாசம், உலகில் மனிதஜென்மம் எடுத்த எல்லோருக்கும் இன்றியமையாதது என்பது யாரும் மறுக்கவியலாத உண்மையாயிருக்கையில் "அந்தஸ்துப்பிரகாரம் நல்லகாற்றும், கெட்டகாற்றும் கிடைக்கிற"தென்னும் பதிலுக்கு அர்த்தமே இல்லையல்லவா? அவனவன் அந்தஸ்து எவ்வாறிருந்த போதிலும், அவனவனும் மனிதனே யல்லவா? இதனை மறுப்பவர்யார்? ஒருவன் எந்த அந்தஸ்தை வகித்திருந்தபோதிலும், 'அவன்மனிதன்" என்ற பதத்தின் கீழ் வந்து விடுகின்றபடியால் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாததான காற்று அந்ததாழ்ந்த அந்தஸ்திலுள்ள மனிதனுக்கும் அவசியமல்லவா?

கலெக்டர் உயர்ந்த அந்தஸ்துள்ளவன் என்றால் அவர் உயர்ந்த ஆசனத்தில் பலர் பணிபுரிய வீற்றிருந்து அமுல் செலுத்துகிறார், அவரது அதிகாரம் நடைபெறுகிறது. தோட்டி தாழ்ந்த அந்தஸ்துடையவனென்றால் அவன், துர்நாற்றமுடைய மலத்தை வாருகிறான்.—ஆனால் இவ்விரண்டு அந்தஸ்தினரும் உயிர்வாழ்வதற்கின்றியமையாததான சுத்தஆகாயத்தில் யாதொரு அந்தஸ்துபேதமுமிருக்க இடமில்லையே? சுத்தமான காற்றுஎந்த அந்தஸ்திலுள்ள மனிதனும் உயிர்வாழ இன்றியமையாததாக வல்லவா இருக்கிறது. எனவே இந்த நியாயத்தின்படி மன்னர்முதல் தோட்டிவரையுள்ள எல்லா மனிதர்களும் ஒரேவிதமான சுத்தக்காற்றைப்பெறுவதல்லவா நியாயம்? இதனை ஒருதேசத்தை ஆளும் அரசாங்கம் கவனித்து மனிதனுக்குரிய "பொதுவுரிமை" யான சுத்தக்காற்று எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டியது கடமையல்லவா? ஆனால் இதைக்கவனிப்பவர்யார்?

இவ்விதமாகவே, மனிதனின் இன்றியமையாத பொருள் களான தண்ணீரிலும், உணவிலும் தாரதம்மியம் காட்டப்பட்டு வருகிறது. மனிதனுக்குக் "காற்று, தண்ணீர், உணவு" இம்மூன்றும், அவன் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதது என்பது இயற்கை நியதியாயிருக்கும் வரையில், உலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் அம்மூன்றும் தாராளமாகப்போதிய அளவு கிடைக்கும்படி செய்யவேண்டிய தவசியமாகும் இதில் மனிதன் அந்தஸ்திற்குத்தக்கபடி தாரதம்மியம் பிரித்தல் என்பதற்கிடமே இல்லை. ஏனெனில், இயற்கையில் தாரதம்மியமென்பது கிடையாது.

உதாரணமாக ஒவ்வொரு மனிதனுக்கும் இவ்வளவு காற்று நாளொன்றுக்குத்தேவை என்றிருக்குமானால், உயர்ந்த அந்தஸ்திலுள்ள எந்தச்சக்கரவர்த்தியையேனும், அந்ததேவையான அளவுக்குக்குறைந்த காற்றை மட்டும் உட்கொண்டு உயிர்வாழச் செய்ய இயலுமா? திட்டமாய் முடியாது. தேவையான அளவுகாற்றின்மையால் அந்த சக்ரவர்த்தி சாவார் என்பதில் என்னதடை. அஃதேபோன்று, அந்தத் தேவையான, இயற்கை அளவுக்கு அதிகமான காற்றை அம்மன்னரை உட்கொள்ளும்படி பலவந்தம் செய்து அதிகப்பட்ட காற்றை அவரது சுவாஸப்பைக்குள் செலுத்தினால் அவ்வரசரின் நிலைமை எப்படியிருக்கும்? அடுத்தநிமிடத்தில் மூச்சுத்திணறி உயிரைவிடுவாரென்பதிலென்ன தடை?

தேவைக்குக்குறைந்த அளவு காற்றும், அதிகமான காற்றும் பாராளுமன்னனுக்கு எவ்வாறு, கேடுவிளைவித்ததோ, அதுவே போன்றுதான் ஓர் ஏழைத்தொழிலாளிக்கும் கேட்டை விளைவிக்கும் என்பதை எந்த ரஸாயன சாஸ்திரி மறுப்பான்? இந்த இடத்தில் இயற்கை நியதி, அரசன் என்றாவது ஆண்டி யென்றாவது அந்தஸ்தைக்கருதிப் பேதம்காட்டிற்றா? இல்லையே. அதுவே போன்று "மனிதனுக்கு இவ்வளவு காற்று வேண்டுமென்றிருந்தால் அவ்வளவு அளவு காற்று அரசனுக்கும் வேண்டும்; ஆண்டிக்கும் வேண்டும். மனிதனுக்கு சுத்தமானபிராணவாயுவுதேவைஎன்றால் அது மன்னனுக்கும் வேண்டும், மாடுமேய்ப்பவனுக்கும் வேண்டும்.

மன்னர் அசுத்தக் காற்றை உட்கொண்டால் அவர் "மன்னராயிற்றே" என்று அஞ்சி, அவரது அந்தஸ்திற்கு இயற்கை மதிப்புவைத்துச் சும்மாவிடுகிறதா? அல்லது தோட்டி அதே அசுத்தக்காற்றை உட்கொண்டால் "ஏழைத்தோட்டியாயிற்றே" என்று அந்தஸ்துத்தாழ்வைக் கருதி இரங்கி அவனுக்கும் கேடுவிளைவியாமலிருக்கிறதா?

இன்றைய உலகில் மக்களுக்குள் அந்தஸ்துப்பேதமிருப்பதே போன்று, இயற்கையையும் அந்தஸ்துப் பிரகாரம் நீதிசெலுத்தும்படி செய்ய முடியுமானாலொழிய, இயற்கை நியதிகளில் அரசனுக்கும் ஆண்டிக்கும் கடுகத்தனை பேதமுமிருக்க இடமேயில்லை.

சிலர், உலகிலுள்ள அரசன்முதல் ஆண்டி ஈறாகவுள்ள மனிதர்கள் அனைவருக்கும் சுத்தமான காற்றுகிடைக்கும்படி செய்வது சாத்தியமானதா? எனக்கேட்கலாம். மனிதனுக்குச்சுத்தமான ஆகாயம் இன்றியமையாததென்றிருக்கையில், தன் ஆட்சியிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் சுவாசிப்பதற்கு போதுமான சுத்தக்காற்றுகிடைக்கும்படி செய்வதைவிட ஓர் அரசாங்கத்திற்கு வேறென்ன வேலைஎன்று கேட்கின்றோம்.

## உலகம்பொது வானதே.

உலகிலுள்ள அணுமுதல் மலைஅளவுபெரியது வரையுள்ள ஒவ்வொரு வஸ்துவும், உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவானதே யாகும். இந்த உண்மையை அரசாங்கங்கள் உணர்ந்து கொள்ளாமலில்லை. தெரிந்து கொண்டுதானிருக்கின்றன. இருப்பினும், ஏதேச்சாதிகார ஆணவமும், பாமரமக்கள் இயற்கைத் தத்துவத்தில் தங்களுக்கும் உரிமைப்பாகம்இருப்பதைஅறிந்துகொள்ளாதிருத்தலுமே, அரசாங்கங்கள்இவ்விஷயத்தில் முயற்சியற்றிருக்கக்காரணம்.

கரியமிலவாயு நிரம்பியுள்ள ஓர் பிரதேசத்தில் மன்னர் களையும் மாடோட்டிகளையும் இருக்கவைத்தால் இருதிறத்தாரும் மாண்டொழிவது திண்ணம். அதேபோன்று அவ்விருதிறந்தாரையும் அங்கிருந்து மீட்டு சுத்தமான பிராணவாயுநிறம்பியுள்ள இடத்தில் விட்டால் எல்லோரும் சுகமாக வாழ்வது திண்ணம், இது இயற்கை நியதி, இதில்பாராபட்சம் கிடையாது. மற்றபடி பணம்படைத்தோர்தங்களுக்கென சிறந்த வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு சுகமனுபவிப்பதும், ஏழைகள் அவ்வாறு செய்ய மாட்டாமல் அவதியடைவதும் இயற்கை நியதிக்கு அப்பாற்பட்ட திமிரின் செயலாகும்.

மதனாகமம்
(புதுச்சேரிப் பதிப்பு)
மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. இதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம் விலை ரூ. 1—0—0.
வஸந்த நிலையம்.
தர்மராஜா கோவில் வீதி,
புதுச்சேரி.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றுக்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும். பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம். இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது. இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது. இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது. இதன் விலை அணா 0—2—0

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
5. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
6. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
7. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
**ஈரோடு.**

---

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது
# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

---

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

---

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

---

## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

---

## அபான வெடி அல்லது வாய்வு பேதி.

இதனை சாப்பிட்ட சில நேரத்திற்குள் தேகத்திலுள்ள தச வாயுவின் மிகுதியை அபானத்தின் வழியே போக்கிவிடும். சிலருக்கு 1 வேளை மருந்தில் 40—50 தடவை வரை காத்து பரிகிறது. வாதம், வாய்வு உபாதை உடனே தீரும். புட்டி 1க்கு ரூ. 1.

1. "தங்கரசம்" சகலவியாதிகளைப் போக்கும்; புட்டி 1க்கு ரூ. 1-0-0. 2. "St. ஜேவியர் சால்ட்" சுகபேதி சர்வரோக சங்காரி; புட்டி 1க்கு ரூ. 1-4-0. 3. "சந்தனாதித் தைலம்" நல்ல குளிர்ச்சியை தரவல்லது; புட்டி 1க்கு ரூ. 1-0-0. 4. "G. L. கல்நார் பற்போடி" தந்த வியாதிகளுக்கு சஞ்சீவி; டஜன் 1க்கு ரூ. 1-8-0, பெரியது ரூ. 3-0-0.

கமிஷன் ஏஜெண்டுகள் தேவை. கியாட்லாக் இனாம்.

டாக்டர் ஜி. எல். சாமி,
வரகனேரி, திருச்சினாப்பள்ளி.

---

## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.